விலை ரூபா: 5.00 பக்கங்கள்:- பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 22 புதன்கிழமை (05.06.2002) தொலைபேசி 3378 ஒலி 168

நங்கையர் விரும்பும் நவீன
டிசைன் தங்க
நகைகளுக்கு
நியூ
நகுலா
ஜுவல்லறி

74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## வாக்குறுதிகளை நிறைவேற்ற பிரதமர் பின்னடிப்பு

# அரசு பேசுவதற்குத் தயங்கினால்

# புலிகள் போராடுவதற்குத் தயார்!

## ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கார்டியனுக்குப் பேட்டி!

(லண்டன்)



**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாகவும், இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப்புலிகளிடம் வழங்குவது தொடர்பாகவும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் பின்னிற்பது எமக்கு ஏமாற்றத்தைத் தருகிறது.**

**தமிழர்களது சுய நிர்ணய உரிமை அடங்கிய தீர்வை அரசு தரமுன்வராவிட்டால் போராடுவதற்கு விடுதலைப்புலிகள் தயங்கமாட்டார்கள் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமிழ்க்கார்டியனுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு நூறு நாட்கள் கழிந்துள்ள வேளையில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் இருந்து வெளியாகும் தமிழ்க்கார்டியன் பத்திரிகைக்கு பேட்டி ஒன்றை வழங்கியுள்ளார்.

16 பக்கங்களைக் கொண்ட இப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம்

* ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் மற்றும் பொது இடங்களிலும் முகாமிட்டுள்ள இராணுவம் அவ்விடங்களை விட்டு வெளியேற வேண்டும்.

* மீன்பிடித்தடை முற்றாக

(10ம் பக்கம் பார்க்க)

## அன்ரனா பொருத்திய சம்பவத்தில்
## மின்சாரம் தாக்கி காயமடைந்த தாயாரும் நேற்று மரணமானார்

(யாழ்ப்பாணம்)

அன்ரனா பொருத்தும் முயற்சியில் ஈடுபட்ட போது மின்சாரம் தாக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரில் தாயாரும் நேற்று மாலை மரணமானார்.

திருநெல்வேலி கம்பஸ் லேனைச் சேர்ந்த தனபாலசிங்கம் சிவயோகநாயகி (வயது 55) என்பவரே மரணமானவர் ஆவார்.

இத்துயரச் சம்பவத்தில் இவரது மகன் தயாபரன் கடந்த மாதம் 27ம் திகதியும் மகள் கலைச்செல்வி கடந்த மாதம் 29ம் திகதியும், மற்றைய மகளான கலைவாணி கடந்த முதலாம் திகதியும் உயிரிழந்தமை

(10ம் பக்கம் பார்க்க)

## எம்மை விடுதலை செய்விப்பதில் அரசுக்கு அக்கறை இல்லை

### கப்டன் போயாகொட தெரிவிப்பு

(வவுனியா)

கடந்த 8 ஆண்டு காலமாக தம்மை விடுவிக்க எந்தவொரு ஆட்சியாளர்களும் நடவடிக்கை எடுக்கவில்லை இந்த நிலை ஏன் தொடர்கிறதென விடுதலைப் புலிகளின் கைதியாகவுள்ள கடற்படை கப்டன் அஜித்குமாரபோயாகொட பத்திரிகையாளரிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

அண்மையில் வன்னிக்குச் சென்ற பத்திரிகையாளர் ஒருவர் விடுதலைப் புலிகளிடம் போர்க்கைதியாகவுள்ள படை வீரர்களைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

கடற்படைக் கப்டன் அஜித்குமார போயாகொட அப்பத்திரிகையாளரிடம் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

(10ம் பக்கம் பார்க்க)

# அரசு- புலிகள் சமாதான முயற்சிக்கு பூரண ஆதரவை வழங்கத் தயார்!

## ஜப்பானில் நான்கு மகாநாயக்க தேரர்களும் கூட்டாக அறிவிப்பு

(டோக்கியோ)

நாட்டின் நிரந்தர சமாதானத்தை

சார விஜயமாக யப்பானுக்குச் சென்ற இம் மகாநாயக்கர்கள் அங்கு இடம்

தானமான முறையில் தீர்வு காணும் பொருட்டு பிரதமர் ரணில் விக்கி ரமசிங்கா கடினமான முயற்சியை

## சிவசிதம்பரம் எம்.பியின்

(டோக்கியோ)

நாட்டின் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாக பௌத்த பீடத்தின் நான்கு மகாநாயக்கர்களும் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கலாசார விஜயமாக யப்பானுக்குச் சென்ற இம் மகாநாயக்கர்கள் அங்கு இடம் பெற்ற கூட்டம் ஒன்றின் நிறைவில் வெளியிட்ட கூட்டறிக்கையிலேயே மேற்படி சமாதான ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழர்களின் கிளர்ச்சிக்கு சமாதானமான முறையில் தீர்வு காணும் பொருட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கடினமான முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்.

நாட்டில் அனைத்து இன மக்களினதும் சமத்துவம், இறைமை பேணப்படும் வகையில் ஐக்கிய இலங்கை என்ற வரையறைக்குள் தீர்வைக்

(10ம் பக்கம் பார்க்க)

# பலாலியைப் போன்று சாவகச்சேரியும்

# உயர் பாதுகாப்பு வலயமாகும்!

## இராணுவத் தளபதி பலகல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

பலாலி விமானப்படைத்தளத்தைப் போன்று சாவகச்சேரி நகரமும் அதனை அண்டிய பகுதிகளும் உயர் பாதுகாப்பு வலயமாக கருதப்படுவதாக இராணுவத் தளபதி ஜெனரல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் றொகான் தளுவத்த ஓய்வு பெறும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் புரிந்துணர்வு உடன்

(10ம் பக்கம் பார்க்க)

## செயலமர்வின் இறுதிநாளில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்விவலயத்துக்கு உட்பட்ட ஆசிரியர்களுக்கான ஆரம்ப கணிதபிரிவு செயலமர்வின் இறுதி நாள் நாளை மறுதினம் நடைபெறுமெனவும் அன்றைய தினம் காலை 830 மணிக்கு ஆசிரியர்களை சமூகமளிக்குமாறும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

(10ம் பக்கம் பார்க்க)

***உள்ளே:-***

**அன்பார்ந்த மாணவர்களே இன்றைய வலம்புரியுடன் தரம் 5ற்கான புலமைப்பரிசில் மாதிரிவினாத்தாள் வெளிவருகிறது.**

## பாராளுமன்றில் அனுருத்த

(நமது நிருபர்)

3மாத இடைவெளிக்குப் பின் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை நேற்றுப் பாராளுமன்றம் சென்றிருந்தார்.

கடந்த பொதுத் தேர்தலின் போது மடவளையில் பத்து முஸ்லிம் இளைஞர்களின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஜெனரல் ரத்வத்தை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டமை தெரிந்ததே (வ)

# சிவசிதம்பரம் எம்.பியின் உடல்நிலை கவலைக்கிடம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், தேசியப்பட்டியல் எம்.பியுமான எம்.சிவசிதம்பரம் கடும் சுகயீனம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 49ம் வாட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள இவருக்கு தற்பொழுது செயற்கைச் சுவாசம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் நேற்று நள்ளிரவு தெரிவித்தார். (வ)

# பலாலிப் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் குடியமர அனுமதியோம்

## பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

(பாராளுமன்ற நிருபர்)

பலாலி இராணுவத் தளத்தை அண்டியுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் இப்போதைக்கு மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை முற்று முழுதாக அமுல்ப்படுத்த வேண்டும் என்று திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நேற்றுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உரையாற்றினார்.

அவ்வுரையின் போது வடக்குக் கிழக்குப் பகுதியில் ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் இருந்து இராணுவம் வெளியேறினால் வெளியேறிய இடங்களுக்கு அருகாமையில் புதிய முகாம்கள் அமைக்கப்படும்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


### விற்பனைக்குஉண்டு

கணக்கர்வளவு கந்தரோடை சுன்னாகத்தில் இரண்டு பரப்புக் காணியுடன்கூடிய வீடு, இரண்டு கடை என்பன விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி க.இராசதுரை கணக்கர்வளவு (ஆலடிக்கு முன்பாக) கந்தரோடை, சுன்னாகம்.

(கி-4333)


### முன்கூட்டியே பதிவுசெய்க

(யாழ்ப்பாணம்)

எக்ஸ்போ தனியார்விமான சேவையின் ஆசனப்பதிவுகளை முன்கூடியே செய்யுமாறு அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

5,6,7,8ம் திகதிகளுக்குரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

### நடைபாதை வியாபாரம்

# இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில்இடம் பெற்றுவரும் நடைபாதை வியாபாரங்கள் இன்றுமுதல் யாழ். மரக்கறிச் சந்தையின் உள்பகுதிக்கு மாற்றப்படுவதாக போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாநகரசபையுடன் இடம் பெற்ற கலந்துரையாடலில் இவ் இடமாற்றத்திற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நகர மத்தியில்இடம்பெறும் அதிகரித்த நடைபாதை வியாபாரத்தால் போக்குவரத்து இடையூறுகள், வீதிவிபத்துக்கள் அதிகரித்துள்ளமைதெரிந்ததே

இதேவேளை, இடமாற்ற அறிவிப்பை அனுசரிக்கத் தவறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

(உ-10)

# இராசி பலன்

5 6.2002

வைகாசி22புதன்

தசமி ந.இ 12.28வரை

உத்தரட்டாதிபி.ப3.51வரை

ராகுகாலம்11.52-1.22

நல்லநேரம் 4 22-5.52

**மேடம்**
அன்னியர்உதவி, குடும்ப நன்மை,நல்லகாரியம்

**இடபம்**
முயற்சிதாமதம், கௌரவக் குறைவு,நண்பர்கள்உதவி

**மிதுனம்**
காரியதாமதம்,அதிகாரிகள் வெறுப்பு,மனச்சோர்வு

**கடகம்**
நினைத்தகாரியம் கைகூடும் தொழில்நன்மை, பணவரவு

**சிங்கம்**
வீண்சிந்தனை, சுவாரஷ்யம்,உடல்சுகம்

**கன்னி**
மதிப்புக்குறைவு,பயந்தசுபாவம்,நல்லசெய்தி

**துலாம்**
வாகனசுகம்,போசனசுகம், பொருள் விரயம்.

**விருச்சிகம்**
வாக்குமேன்மை, இனிய சம்பவம், பயணம்.

**தனுசு**
குடும்பக் கவலை, முயற்சி தடங்கல்,உறவினர்சந்திப்பு.

**மகரம்**
தெய்வசிந்தை, உடல்நலக் குறைவு, போசனசுகம்.

**கும்பம்**
காரிய அலைச்சல், பெரியோர் நன்மை,சென்ற இடத்தில் சிறப்பு.

**மீன**
குடும்பசுகம், தொழில் நன்மை, பணவிரயம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

# புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்த சரியான விளக்கம் படையினர் மத்தியில் இல்லை

## மீறல்களுக்கு இதுவும் காரணம்

**இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு நேற்றுடன் 100 நாட்கள் பூர்த்தியடைந்துள்ளன.**

**இந்த 100 நாட்களில் மேற்படி உடன்படிக்கையின் கீழ் செயற்பாடுகள் எவ்வாறுள்ளன என அரசியல் பகுப்பாய்வாளர் தமிழ் மாறன் பி.பி.ஸி தமிழ்ச் சேவைக்கு அளித்த பேட்டி.**

கேள்வி:- அரசு புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்றுடன் 100 நாட்கள் பூர்த்தியடைந்த வேளையில் அதன் செயற்பாடுகள் பற்றிஉங்கள் கருத்து என்ன?

பதில்:- இவ் உடன்படிக்கை ஒரு சர்ச்சைக்குரிய பின்னணியில் உருவாகியது. இவ் உடன்படிக்கையில் உள்ள சில ஏற்பாடுகள் தொடர்பாக ஒரு தெளிவற்ற நிலைமையும், அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தங்களுடைய சொந்த வியாக்கியானத்தை கொடுக்கின்ற ஒரு நிலையும் இருந்தது. அந்த நிலைமை இப்போது தொடர்ந்து வருகின்றது. அப்படியிருந்தும் இந்த 100 நாட்களில் எந்தவிதமான பாரிய மோதல்களும் இடம்பெற்றதாக சொல்ல முடியாத அளவுக்கு இவ் உடன் படிக்கை இருதரப்பினராலும் கடைப்பிடிக்கப் பட்டுவருகிறது என்றுதான் கூற வேண்டும்.

ஆங்காங்கே சில மீறல்கள் இருப்பதாககூறப்படுகின்றன.

இருந்தாலும்,

இந்த உடன்படிக்கையில், 90 நாட்கள் நிறைவேறியதும் கட்டாயமாக முற்றுப் பெற வேண்டியதான சில விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

அவற்றின் படி குறிப்பாக விடுதலைப் புலிகள் படையினருடைய கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் தங்களுடைய அரசியல் வேலைகளுக்காக எந்தவித கட்டுப்பாடுமின்றி எவ்வளவு பேரும் சென்று வரமுடியும் என்ற நிலைமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல் படையினர் ஏ-9 கண்டி வீதியைப் பாவிப்பதற்குரிய வசதிகள் இருந்தும் அதை இன்னும் படையினர் பாவிக்கத் தொடங்கவில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

அதேபோல,அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கின்ற கட்டடங்கள்,பாடசாலைகள் போன்றவற்றிலிருந்து படையினர் வெளியேற வேண்டிய அந்த விடயமும் இன்னும்முற்றுப் பெற்றதாக தெரியவில்லை.

கேள்வி:- இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற் படையினர் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் வகையில் செயற்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளனவே.

பதில்:- இதில் 2 அம்சங்கள் உள்ளன. ஒன்று வேண்டுமென்றே படையினர் இ சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிப்பதை நோக்காக கொண்டு செயற்படுகின்றார்கள்.

புரிந்துணர்வுஉடன்படிக்கை வாசகங்கள் சரியான முறையில் அவர்களுக்கு விளக்கிக் கூறப்படாத நிலையில் இத்தகைய மீறல்கள் நடை பெறுகிறதாஎன்பது இன்னொன்று,

உதாரணமாக கிழக்கிலங்கையில் இடம் பெற்ற அதிரடிப்படையினர், போக்குவரத்து பொலிஸாரின் கடமையை தாம் செய்ய முற்பட்டு விடுதலைப்புலி உறுப்பினரைக் கைது செய்துதாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த உடன்படிக்கையின் படி,பயங்கரவாத தடைச்சட்டம் இடை நிறுத்தி வைக்கப் படுகிறது என்று அங்கு குறிப்பிடப் பட்டிருக்கின்றபடியால் இராணுவம் ஒருவரை கைது செய்யும் அதிகாரம் தற்பொழுது இல்லை.

அப்படியிருந்தும் இவ்வாறான ஒரு நிலையை பாரிய மீறல்களென சொல்லாமல் ஒரு விளக்கஉணர்வு இல்லாத காரணத்தால் நடைபெற்ற மீறல்களென குறிப்பிடுகிறார்கள்.

இதுதொடர்பில் கண்காணிப்புகுழுவில் படை அதிகாரிகளுக்கு போதிய விளக்கம் கொடுத்திருக்கிறார்களா என்பதுதான் இங்கே முக்கியமான விடயம்.

கேள்வி;

இப்போது வர்த்தமானியில் வெளிவந்திருக்கும் அறிவித்தலின்படி மீன்பிடிப்பதில் விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டிருப்பதற்கு ஏதாவது உள்நோக்கம் இருக்கிறதா?

பதில்;

இது ஒரு மிகப்பாரதூரமான விடயம் இப்புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்டதன்நோக்கம் ஒரு யுத்த நிறுத்தத்தை உடனடியாக கொண்டுவந்து சமாதானப் பேச்சில் ஈடுபடுவதற்கான சுமுகமான நிலையை ஏற்படுத்தல்.

அப்படி பார்க்கும்போது இவ் உடன்படிக்கையின் 2 வது பிரிவு 12 பந்தியில் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது, பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் எடுக்காமல் சாதாரண சட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்படும்என்று.

ஆனால் இப்போது வர்த்தமானி அறிவித்தல்கள் பயங்கரவாததடைச்சட்டத்தின் 27 வது பிரிவின்கீழ் வெளியிடப்பட்டிருக்கின்றன. இம் மீன்பிடித்தல் சம்பந்தமான ஒரு கட்டுப்பாட்டு வலயத்தை உருவாக்குவதாக அமைந்திருக்கின்றது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் பிரிவு 27ஐ பாவித்துஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுதல் என்பது பயங்கரவாத தடைச்சட்டத்தை இடைநிறுத்திவைத்தல்என்ற புரிந்துணர்வு உடன்படிக்கையை வெளிப்படையாக மீறுவதாக இருக்கிறது.

(உ-9)

# விதி முறையை மீறிய பன்னிருவர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில்வேகக் கட்டுப்பாட்டு விதிமுறைகளைப் பின்பற்றத் தவறிய 12 பேர் நேற்று முன்தினம் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் வசம் சிக்கினர்.

இவர்களிடம் தலா 200 ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டதுடன் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (உ-10)

# தலைக்கவசம்அணியாவிடில் தண்டப் பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

மோட்டார்வாகனங்களைச் செலுத்துபவர்களும், பின்னால் அமர்ந்திருப்பவர்களும் கட்டாயமாகத் தலைக்கவசம் அணிதல் வேண்டும்.

எதிர்வரும் ஜூலை 1-ம் திகதி முதல்அமுலுக்கு வரும் இந்த நடைமுறையைப் பின்பற்றத் தவறுவோரிடம் தலா 100 ரூபா தண்டப்பணம் அறவிடப்படும்.

இவ்வாறு கண்டிப்பானஉத்தரவினை போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் விடுத்துள்ளனர் (உ-10)

# மணிக்கூட்டுக் கோபுரம் 19 ஆம் திகதி திறப்பு

### வீதித் தடை தொடர்ந்தும் அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மணிக்கூட்டுக்கோபுரப் புனரமைப்புப் பணிகள் முடிவடைவதை அடுத்துஎதிர் வரும் 19ஆம் திகதி புதன் கிழமை திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலய அலுவலக அதிகாரி லிண்டா டபீஃல்ட் இதனைத் திறந்துவைப்பார்.

இந் நிகழ்வில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவும் கலந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேற்படி மணிக்கூட்டுக் கோபுர வீதி இன்னமும் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

யுத்த அனர்த்தங்களால் சேதமான இந்த மணிக்கூட்டுக்கோபுரம் பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் புனரமைக்கப்பட்டு வருவது தெரிந்ததே. (உ-10)

# ரத்வத்த நேற்று பாராளுமன்றில் சமுகம்

(கொழும்பு)

முன்னாள் பிரதிப்பாதுகாப்புஅமைச்சர் அனுருத்த ரத்வத்த சிலமாதஇடைவெளியின் பின்னர் நேற்றுமீண்டும் பாராளுமன்றத்தில் சமுகமளித்தார்.

இவர் பாராளுமன்றத்திற்கு சமுகமளித்திருந்த வேளை ஆளும்கட்சி எதிர்க்கட்சிஉறுப்பினர்களிடையே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டதனால் அங்கு ஒழுங்கற்ற நிலை தோன்றியது.

கடந்தவருடம் டிசம்பர் மாதம்நடைபெற்ற பொதுத் தேர்தல் தினத்தன்று உத்தலவின்ன பகுதியில் 10முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக கைதுசெய்யப்பட்டஇவர் தற்போது பிணையில்விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# அரசியல் யாப்புச் சபை செயற்பட ஆரம்பித்தது

(கொழும்பு)

அரசியல் யாப்புச்சபை தற்போது செயற்பட ஆரம்பித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில்நேற்றுக் காலை இச்சபையின் கீழ் அமைக்கப்படவிருக்கும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவுகள் பற்றிய பிரேரணையை சமர்ப்பிக்கும் போது பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்புச் சபையின் நடவடிக்கைகள் குறித்து அவ்வப்போது பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும்,

ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படவுள்ள அங்கத்தவர்கள் சம்பந்தமாக ஏனையகட்சிகளின் தலைவர்களுடனும், சபாநாயகர்மைக்கல்பெரேராவுடனும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கலந்துரையாட இருப்பதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

### மாணவர் எழுச்சி தினஏற்பாடு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் மூதூர்,குச்சவெளி ஆகிய கல்வி வலயங்களில்நாளை மாணவர் எழுச்சி தினம் கொண்டாடப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

திருமலைகோட்ட கல்வி வலயத்திலிருந்து மூன்று பிரிவாக ஊர்வலம் ஆரம்பிக்கப்பட்டு திருமலைசூசையப்பர் கல்லூரியில் வந்தடைந்து பொதுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை திருமலைமாவட்ட மாணவர் ஒன்றியமும் கல்லூரி அதிபர்களும் செய்துவருகின்றனர்.

(வ)

### ஊழியர் விபரம் கணனிமயம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சினால் கல்விசார் ஊழியர்களின் விபரத்தினை கணனி மயப்படுத்துவது சம்பந்தமான பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி வகுப்பு எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணிக்குயாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(உ-19)

### ஈழத் தமிழர் உரிமை வேட்கையை உலகம் எங்கும் பறைசாற்றி நின்ற

# விடுதலை வீரன் பொன். சிவகுமாரன்

தமிழீழ விடுதலைப்போராட்டமானது தமிழீழ விடுதலைப் புலிகளினால் நிதானமாகவும், வேகமாகவும் வளர்த்தெடுக்கப்பட்ட போதிலும், ஆரம்பகால எழுச்சியை ஏற்படுத்தியவர்களில் பொன் சிவகுமாரன் குறிப்பிடத் தக்கவர்.

இவர் உரும்பிராயைப்பிறப்பிடமாகக் கொண்டவர் .தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் ஏந்திப் போராடி வீரமரணம் அடைந்த மாவீரரான இவர் போராளிகள் மத்தியில் சயினைற்றை அறிமுகப்படுத்தியதுடன் சயினைற்அருந்தி வீரச்சாவை தழுவிக்கொண்டவர். அமைதி வழிப் போராட்டப் பாதையை நிராகரித்துவிட்டு ஆயுதம் ஏந்திப் போராடினால் தான் தமிழ் மக்களின் இழந்த சுதந்திரத்தையும் உரிமைகளையும், பெறமுடியும் என்ற முடிவுடன் விடுதலைப் போராட்டத்தில் குதித்தவர்.

இவர் உரும்பிராயைச் சேர்ந்த பொன்னுத்துரை அன்னலட்சுமியின் செல்வப் புதல்வனாவார். யாழ் இந்துக்கல்லூரி விடுதலைப் போராட்டத்திற்கு தந்த மாணவர்களில் இவர் மூத்தவராவர். 1971ம் ஆண்டு தமிழ் மாணவர் பேரவையில் சேர்ந்து ஒருசில இளைஞர்களைச் சேர்த்துக் கொண்டு சிங்கள அரசையும் தமிழ் துரோகிகளையும் எதிர்த்து நேரடி நடவடிக்கையில் இறங்கியவர்.

> பொன். சிவகுமாரனின் 28-வது இறந்த தினத்தை ஒட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

சிவகுமாரனின் போராட்ட முயற்சிகளில் முதற்கட்டமாக தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு உலைவைக்கும் தரப்படுத்தலை அமுல்படுத்திய சிறிமாவோ பண்டாரநாயக்காவின் துணை அமைச்சர் சோமவீர சந்திரசிறிக்கு நேரக் கணிய வெடிகுண்டு வைத்தார். அதில் அமைச்சர் தப்பிய போதிலும் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டார். பின்னர் சாட்சியங்கள் இல்லாத காரணத்தினால் சில மாதங்களின் பின் விடுதலையானார்.

போராட்ட முறையானது அ3்5 கொள்கைகளை நிலைநாட்ட இலக்குகளை அடைய பயன்படுத்தப்படும் மார்க்கமே தவிர போராட்ட முறையே கொள்கை அல்ல என்பதை வலியுறுத்தியவர். எனவே தான் போராட்டப் பாதையை ஆயுதம் ஏந்திய போராட்டமாக ஏற்றுக் கொண்டிருந்த போதிலும், தமிழீழ இலட்சியங்களுக்காக, உரிமைகளுக்காக அமைதி வழியில் அகிம்சை வழியில் நடைபெற்ற போராட்டங்களை பெரிதும் மதித்து வந்தவர்.

ஒரு தடவை நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவில் சனநெரிசலைப் பயன்படுத்தி பெண்களிடம் தகாத முறையில் நடந்த பொலிஸ் ஒருவனை நையப்புடைத்தார். பின்பு அங்கு நின்ற பொலிஸாரால் கைதுசெய்ப்பட்டபோதும், அவர்களையும் சரமாரியாகத் தாக்கினார். நிலைமை மோசமாகவே யாழ்ப்பாணத்தில் இருந்து பொலிஸாரை வரவழைத்து கைது செய்து அழைத்துச் செல்லப்பட்டார். எப்பொழுதுமே மீசை வைத்துக் கொளளாது குழந்தை முகமாக காட்சியளிக்கும் இவர் ஆட்களுடன் பழகுவதிலும் குழந்தைத்தனம் தான் காணப்படும் ஆனால் அநீதிகளையும் முறைகேடுகளையும் எதிர்கொள்ளும்போதுமட்டும் அவர் புலிபோல உறுமுவார்.

குற்றமற்ற போராளியாக விளங்கிய சிவகுமாரனால் ஒரு சிறந்த விடுதலை அமைப்பை கட்டி எழுப்ப முடியவில்லை. காரணம் அவருடன் பங்குபற்றி வந்த குழுவினர் எல்லோரும் அவர் போல் இருக்கவில்லை. இந்நிலையில் ஒருசில இளைஞர்களை வைத்துக் கொண்டு ஏதாவது செய்தாக வேண்டும் என்று அவர் எண்ணினார்.

விடுதலை ஆரம்பபோராட்ட வரலாற்றில் தலைமறைவாக இருந்த விடுதலைப்புலிகளின் தலைவர் 'பிரபாகரனைச் சந்தித்து அவருடன் சேர்ந்து இயங்குவதற்கு சிவகுமாரன் பெரிதும் விரும்பினார். அதே போலவே பிரபாகரனும் சிவகுமாரனைச் சந்திக்கவிரும்பினார். பின்பு 4வது உலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடு 1974ம் ஆண்டு தைமாதம் 3- 9ம் திகதிவரையாழ். நகரில் நடைபெற்றது. இதற்கு சிறிமாவின் அரசு பல இடையூறுகளைச் செய்தது. இருப்பினும் யாழ்நகரில்மகாநாட்டை செய்தே தீருவேன் என சிவகுமாரன் அம்மகாநாட்டு தொண்டர்படையில் இணைந்துசிறப்பாகசெயலாற்றினார். இதற்கானநற்சான்றுதலையும் மாநாட்டுக் குழுவிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

எம்முடைய ஆரம்பகாலவிடுதலைப் போராட்டத்திற்கு நிதிசேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார் அதன்படி பாதுகாப்பு ஒழுங்கிற்காக1000 ரூபாதேவைப்படுகிறது என்று அன்றைய தமிழர்விடுதலைக் கூட்டணி வழக்கறிஞரும் பின்னாள் யாழ்ப்பாணபாராளுமன்ற உறுப்பினருமான யோகேஸ்வரனிடம் அனுப்பியபோது அவர்பணம்இல்லாமல் திண்டாடினார்.

தலைவர்கள் என்போர் தீவிரவாதம் பேசுவதெல்லாம் வெறு நடிப்பிற்காகத்தான் சுயநலனுக்காக அவர்கள் தீவிரவாதம் பேசுவார்கள் ஆனால் உண்மையான விடுதலைஅமைப்பிற்கு அவர்கள் எவ்விதத்திலும் உதவமாட்டார்கள் அவர்களை நம்பி இனியும் ஏமாறக் கூடாது என்றுகூறி தனதுதோழர்களுடன் கோப்பாய் கிராமிய வங்கிக்குச் சென்றார்.

1974ம்ஆண்டு யூன் 5ம்நாள் தன்தோழர்கள் சிலருடன் கோப்பாய் கிராமியவங்கிக்கு சென்றவேளையில் வங்கியின் முன் பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டார். அங்குநடந்த துப்பாக்கிச் சண்டையில் இருரவைகள் தீர்ந்துபோன நிலையில் பொலிசாரிடம் உயிருடன்பிடிபடக்கூடாது என்ற கொள்கையுடன் தயாராக வைத்திருந்த சயினைட்டை அருந்தி வீரமரணம் அடைந்தார் இவ்வாறு சிவகுமாரன் தமிழீழவிடுதலைப் போராட்டத்தின் ஊற்றுக்கண்ணாக விளங்கியது மட்டும் அல்லாமல் இன்றுபெருவிருட்சமாக வளர்ந்திருப்பதை நாம்கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது. ●

### உலக வங்கி ஆசியப் பிராந்தியத்துணைத் தலைவரிடம்

## வடக்கிற்கான நகர அபிவிருத்தி சபை

# அமைப்பதன் அவசியம் குறித்து வலியுறுத்து

(தென்மராட்சி)

வடக்கில் புனரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியமர்வுப் பணிகளை துரிதகதியில் முன்னெடுத்துச் செல்ல வசதியாகவும், அரசாங்கத்தினாலும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களாலும் வழங்கப்படக்கூடிய நிதிகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்கமைத்து வழங்கவும் வடக்கிற்கான அபிவிருத்திவங்கி ஒன்றினை அமைக்க ஆவன செய்யவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணத்திலுள்ள சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்திருந்தஉலகவங்கியின் ஆசியப் பிராந்தியத் துணைத்தலைவரிடம் கையளித்த மகஜரில் தெரிவித்துள்ளது.

இக்குழுவின் இணைச் செயலாளர்களான வண.பிதா ஜே. பி. ஈ. செல்வராஜா, எஸ். பரமநாதன் ஆகியோரால் கையொப்பமிட்டு வழங்கப்பட்ட அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

1998 இல் வடக்கிற்கான புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் (றான்) மாவட்டச் செயலகம், மற்றும் மாகாண அரச நிறுவனங்களின் ஆதரவுடன் தயாரிக்கப்பட்ட 'யாழ்ப்பாணத்திட்டம்' பல்வேறு விதமான நெருக்கடியான விமர்சனங்களைக் கொண்டிருப்பதால், அதில் சில ஒழுங்கமைக்கப்பட்ட அணுகுமுறைகள் உள்வாங்கப்படவேண்டியதேவை உணரப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வடக்கில் மிதிவெடி அகற்றல், உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களைத் தமது சொந்த வாழ்விடங்களில் மீள்குடியமர்த்தல், பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படை தேவைகளை வழங்கல், மற்றும் மருத்துவ சேவைகள் ஆகியன உடனடித் தேவைகளாக கருதப்பட்டு உடனடியாக அமுல் செய்யப்படவேண்டும்.

அத்துடன், நடுத்தர அபிவிருத்தி நிலைப்பாட்டில் நீர் விநியோகம், நீர்ப்பாசன பணிகளின் புனரமைப்பு புனர்வாழ்வுப் பணிகள், மின்சாரம், வீதிகளும் பாலங்களும், தொலைத் தொடர்பு, மற்றும் மரம் நடுகை போன்றவற்றினை தரமுயர்த்தல் பணிகள் மேற்கொள்ளல் வேண்டும்.

வடக்கின் அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளூராட்சி அதிகார சபைகள் நல்ல பங்காளர்களாக ஆக்கப்படல் வேண்டும்.

அத்துடன் இங்கு மேற்கொள்ளப்படக்கூடிய அபிவிருத்திப் பணிகளை திட்டமிட்டு இலகுபடுத்துவதற்கு வசதியாக'வடக்கிற்கான நகர அபிவிருத்தி அதிகார சபை' ஒன்றினைநிறுவுதல் வேண்டும்

இவற்றினை அமுல்செய்வதற்கு ஏதுவாக ஏற்கனவே தயாரிக்கப்பட்ட 'யாழ்ப்பாணத்திட்டத்தில் மக்களை மையப்படுத்திய திட்டங்கள் ஆலோசனைகள் உள் வாங்கப்படல் வேண்டும். தனியாக நிதி சேகரிப்பதற்கு மட்டும் அடிப்படையாக இத் திட்டம் இருக்கக் கூடாது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-77,6)

### இந்தியா-பாகிஸ்தான் இடையே

# அணுவாயுத யுத்தம் மூண்டால் இலங்கைக்குப் பேராபத்து

(கொழும்பு)

இந்தியாவுக்கும்-பாகிஸ்தானுக்கும் இடையில் அணுவாயுத யுத்தம் தொடங்கும் பட்சத்தில் தென்இந்தியாவை நோக்கி அணு ஆயுதங்கள் ஏவப்படுமானால் அவற்றின் கதிர்த்தாக்கம் இலங்கையைப் பாதிக்கும் அபாயம் உண்டு என்று காலநிலை அவதானிப்புப் பிரிவு நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

ஏவப்படும் அணுவாயுத ஏவுகணைகள் குறித்த இலக்கை மீறி நேரடியாக இலங்கையை தாக்கலாம் என்றும்,

தென்னிந்தியாவில் ஏற்படும் அணுவாயுதவெடிப்புத் துகள்கள் இலங்கைக்கு காற்றின் மூலம் பரவும் வாய்ப்பு உண்டு என்றும் அணுசக்தி அதிகார சபைத் தலைவர் பேராசிரியர் பிரிநாத் டயஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அணு வாயுத தாக்கத்தால் ஏற்படும் அழிவுகளிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்குவிஞ்ஞானத்துறையினர் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது.

அணுவாயுத யுத்தமொன்றின் தீவிரதாக்கங்களைத் தடுப்பதற்கும் பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்குமான ஆற்றலும் வளங்களும் இலங்கையில் இல்லை எனவும் பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-3)

# பிரதேசகல்வித்திணைக்கள நடைமுறைவிரைவில்அமுல்

(யாழ்ப்பாணம்)

கல்வி வலயங்கள் யாவற்றையும் ஒரு கல்விப் பணிப்பாளரின் கீழ் பிரதேச கல்வித் திணைக்களமாகஇயங்க வைப்பது பற்றி கல்வி உயர்கல்வி அமைச்சு வட்டாரங்கள் ஆராய்ந்து வருகின்றன.

மேற்படி திட்டம் ஒகஸ்ட்

(8-ம் பக்கம் பார்க்க)

## நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கிறிஸ்தவ வாலிபர்சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் நவாலி கிறிஸ்தவ வாலிப சங்க கட்டடத்தில் நடைபெற்றது.

தலைவராக டி.ஆர். அருமைநாயசமும் உபதலைவர்களாக வி. மித்திரறஞ்சன், வி.எம். தங்கராஜ் மற்றும் செயலாளராக எம். ஜெயராஜசிங்கம் ஆகியோரும் நடப்பு ஆண்டுக்கான நிர்வாக சபை அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

(உ- 6)

## யூரியா விலை 110 ரூபா குறைப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாயிகள் நலன் கருதி, இன்று முதல் யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தினால் யூரியா உரம்520 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளதாக திணைக்கள உதவி ஆணையாளர் கே.சுந்தரேசன் தெரிவித்தார்.

முன்பு 630 ரூபாவாக மேற்படி உரம்விற்கப்பட்ட போதிலும், தரைவழிப்பாதையூடாக எடுத்துவரப்பட ஆரம்பித்ததைத் தொடர்ந்துஇவ் விலைக்குறைப்பு இடம்பெறுவதாகவும்,

தனியாரிடம் கூடுதல் விலையைக் கொடுத்து ஏமாறாமல், கமநல சேவைகள் திணைக்களத்தின் அதிகாரத்திற்கு உட்பட்ட அனைத்து உள்ளீடுகள் விற்பனை நிலையங்களிலும் கமநல சேவை நிலையங்களிலும் குறைந்த விலையில் யூரியா உரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் சுந்தரேசன் குறிப்பிட்டார்.

இது குறித்த அறிவுறுத்தல்கள் சகல பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 11

## பகுதி II

ஆக்கம் – ''சாயிகல்வி வட்டம்''
கே.வி.குணசேகரம்
எம்.விக்னேஸ்வரன்

கீழே தரப்பட்டுள்ள பாடல் குருவியொன்று மானிடனுக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. அப்பாடலை வாசித்து 1 - 8 வரையான வினாக்களுக்கு விடை தருக.

கேளடா மானிடா - எம்மில்
கீழோர் மேலோர் இல்லை
மீளா அடிமை இல்லை - எல்லோரும்
வேந்தரெனத் திரிவோம்
உணவுக்குக் கவலை இல்லை - எங்கு
பார்க்கினும் உணவு கிடைக்குமடா
பணமும் காசும் இல்லை எங்கு
பார்க்கினும் உணவேயெடா.

(1) யாருக்குக் கீழோர், மேலோர் இல்லை?
(2) எல்லோரும் எப்படித் திரிவார்கள்?
(3) கவலைப்படாமல் இருப்பது எதற்கு?
(4) பணமும் காசும் இல்லாமல் எதைப்பெறலாம்?
(5) வேந்தன் என்பதன் ஒத்தசொல் தருக?
(6) அடிமைக்கு எதிர்ச்சொல் தருக?
(7) உணவுக்கு ஒத்தசொல் தருக?
(8) 'கிடைக்குமெடா' பெண்பாற் சொல்லில் எழுதுக?


சோடாத் தொழிற்சாலை ஒன்றில் ஐந்து நாட்கள் உற்பத்தி செய்யப்பட்ட சோடாவின் எண்ணிக்கை கீழேயுள்ள வரைபில் தரப்படுகின்றது.





உரு ஒன்று ஆயிரத்தைக் குறிக்கும்.

(9) திங்கட்கிழமை 6750 போத்தல்கள் சோடா விற்பனை செய்யப்பட்டதாயின் மிகுதி எவ்வளவு?
(10) செவ்வாய்க்கிழமை, திங்கட்கிழமை மிகுதியும் சேர்க்கப்பட்டது. அன்றைய விற்பனையின் பின் 450 போத்தல்கள் எஞ்சியிருந்தன. அன்று விற்கப்பட்ட சோடாப் போத்தல்கள் எத்தனை?
(11) புதன் கிழமை உற்பத்தி செய்யப்பட்ட சோடாப் போத்தல்கள் முழுவதும் விற்பனையாகி விட்டது. அன்று உற்பத்தி செய்யப்பட்ட சோடாப் போத்தல்கள் எத்தனை?
(12) வியாழக்கிழமை 2000 போத்தல்களும் வெள்ளிக் கிழமை 1500 போத்தல்களும் எஞ்சின இரு நாட்களும் விற்பனையான போத்தல்கள் எத்தனை?
(13) திங்கட் கிழமையும், வெள்ளிக் கிழமையும் உற்பத்தி செய்யப்பட்ட சோடாக்களின் எண்ணிக்கை என்ன?
(14) செவ்வாய்க் கிழமை A என்ற கடைக்கு 3750 போத்தல்களும் C என்ற கடைக்கு 1250 போத்தல்களும் B என்ற கடைக்கு 2335 போத்தல்களும் விற்கப்பட்டன. மிகுதியாகவுள்ள தொகை என்ன?
(15) C என்ற கடையை விட B என்ற கடைக்காரர் எத்தனை போத்தல்கள் கூட வாங்கினான்?
(16) A என்ற கடைக்காரன் தனக்கு 2.00 லாபம் வைத்து D என்ற சில்லறை வியாபாரிக்கு 25 போத்தல் சோடாவை விற்கின்றான். D தனக்கு ஒரு ரூபா இலாபம் வைத்து

படத்தைப் பார்த்து அம்புக்குறியால் குறிக்கப்பட்டவற்றை ஆங்கிலத்தில் எழுதுக.
(32) ........................ (33) ..................
(34) ........................ (35) ..................
(36) ........................




மூன்று வகையான ஆடிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் பொருளைக் குறிக்கும் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.




| A (37) | B (38) | C (39) |
|---|---|---|
| (1) குழிவு ஆடி | (1) குழிவு ஆடி | (1) தள ஆடி |
| (2) குவிவு ஆடி | (2) தள ஆடி | (2) குழிவு ஆடி |
| (3) தள ஆடி | (3) குவிவு ஆடி | (3) குவிவு ஆடி |

(40) சூரிய அடுப்புக்குப் பயன்படும் ஆடி எது?
(41) பல் வைத்தியர் பாவிக்கும் ஆடி எது?
(42) பன்னுருக்காட்டி செய்வதற்குப் பயன்படுத்தும் ஆடி எது?
(43) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
1. ''மங்கையர் எல்லோரும் வாருங்கடி'' என்ற இப்பாடல்.
i கும்மிப் பாடல் ii காவடிப் பாடல் iii கரகப் பாடல்
(44) அம்புலி மாமா வா எனக்கொரு ஆசை மொழி சொல்ல வா என்ற பாடல்
i சதுஸ்ர நடை ii திஸ்ர நடை iii கண்ட நடை
(45) தேசிய கீதத்தை மொழி பெயர்த்தவர்.
i ஆனந்தசமரக்கோன் ii நல்லையா பிள்ளை iii சோமசுந்தரப்புலவர்

**சரியாயின் ''சரி'' எனவும் பிழையாயின் ''பிழை'' எனவும் எழுதுக.**

(46) காலையும் மாலையும் உடற் பயிற்சிக்குப் பொருத்தமான வேளையாகும்.
(47) உயரம் பாய்தல், ஈட்டி எறிதல் சுவட்டு நிகழ்ச்சியாகும்.
(48) போர்த் தேங்காய் அடித்தல் ஒரு போட்டி நிகழ்ச்சியாகும்.
(49) ஒட்டுச் சித்திரத்துக்கு கோழிச் சாயமும், வெண்டிக்காயும் பயன்படுத்தலாம்.
(50) அணி நடையின் போது முன்னுள்ளவரின் தோழிற்குப் பின்னால் வருபவரின் கைகள் உயர வேண்டும்.
(51) மின் அழுத்தி மின்சாரத்தை வெப்பசக்தியாக மாற்றும்.
(52) இரப்போர்க்கு இல்லை எண்ணாது வழங்குபவன் உலோபி.

**கீழே தரப்பட்டுள்ள பற்றுச் சீட்டுக்களை அவதானித்து (53 - 65) வரையான வினாக்களுக்கு விடை தருக.**

**அ.மு. சண்முகம்பிள்ளை அன் சன்ஸ்,**
**பலசரக்கு புடைவை வியாபாரம்,**
**47, பிரதான வீதி, இரத்தினபுரி.**

*திரு. ம.சி.அப்துல் அஸீஸ்* *12.05.2002*

| அளவு | விபரம் | விலை | |
|---|---|---|---|
| | | ரூபா | சதம் |
| 750 கிராம் | கருவாடு | 165 | 00 |
| 2 லீற்றர் 500மி.லீ | தேங்காயெண்ணெய் | 225 | 00 |
| 4 | பிளேன்சோடா | 240 | 00 |
| 2 கி. 250 கிராம் | பருப்பு | 234 | 00 |
| 4 பெட்டி | பிஸ்கற் | 260 | 00 |
| | 1124/= | 1124 | 00 |

| அளவு | விபரம் | விலை | |
|---|---|---|---|
| | | ரூபா | சதம் |
| 1.5 மீ | சீத்தை | 165 | 00 |
| 2 | தலையணை உறை | 120 | 00 |
| 3 | ஸ்கேட் | 675 | 00 |
| 75 செ.மீ | றேந்தை | 12 | 00 |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

சோடாத் தொழிற்சாலை ஒன்றில் ஐந்து நாட்கள் உற்பத்தி செய்யப்பட்ட சோடாவின் எண்ணிக்கை கீழேயுள்ள வரைபில் தரப்படுகின்றது.




 உரு ஒன்று ஆயிரத்தைக் குறிக்கும்.

(9) திங்கட்கிழமை 6750 போத்தல்கள் சோடா விற்பனை செய்யப்பட்டதாயின் மிகுதி எவ்வளவு?

(10) செவ்வாய்க்கிழமை, திங்கட்கிழமை மிகுதியும் சேர்க்கப்பட்டது. அன்றைய விற்பனையின் பின் 450 போத்தல்கள் எஞ்சியிருந்தன. அன்று விற்கப்பட்ட சோடாப் போத்தல்கள் எத்தனை?

(11) புதன் கிழமை உற்பத்தி செய்யப்பட்ட சோடாப் போத்தல்கள் முழுவதும் விற்பனையாகி விட்டது. அன்று உற்பத்தி செய்யப்பட்ட சோடாப் போத்தல்கள் எத்தனை?

(12) வியாழக்கிழமை 2000 போத்தல்களும் வெள்ளிக் கிழமை 1500 போத்தல்களும் எஞ்சின இரு நாட்களும் விற்பனையான போத்தல்கள் எத்தனை?

(13) திங்கட் கிழமையும், வெள்ளிக் கிழமையும் உற்பத்தி செய்யப்பட்ட சோடாக்களின் எண்ணிக்கை என்ன?

(14) செவ்வாய்க் கிழமை A என்ற கடைக்கு 3750 போத்தல்களும் C என்ற கடைக்கு 1250 போத்தல்களும் B என்ற கடைக்கு 2335 போத்தல்களும் விற்கப்பட்டன. மிகுதியாகவுள்ள தொகை என்ன?

(15) C என்ற கடையை விட B என்ற கடைக்காரர் எத்தனை போத்தல்கள் கூட வாங்கினான்?

(16) A என்ற கடைக்காரன் தனக்கு 2.00 லாபம் வைத்து D என்ற சில்லறை வியாபாரிக்கு 25 போத்தல் சோடாவை விற்கின்றான். D தனக்கு ஒரு ரூபா இலாபம் வைத்து 27.00 க்கு விற்கிறான். A சோடாப் போத்தலை வாங்கிய விலை என்ன?

(17) A க்கும் D க்கும் விற்றதன் மூலம் எவ்வளவு இலாபம் கிடைக்கும்?

(18) D யிடம் 1.5லீற்றரில் 8 போத்தல்களும் 750 மில்லிலீற்றரில் 7 போத்தல்களும் மிகுதி 250 மில்லிலீற்றர் போத்தல்களும் இருந்தன. 250 மில்லிலீற்றர் போத்தல்களிலுள்ள சோடாக்களின் அளவை லீற் மில்லி லீற்றரில் தருக?

(19) 8 போத்தல்களில் உள்ள சோடாவின் அளவை லீற்றரில் தருக?

(20) கனியோன் 750 மி.லீ. கொண்ட இரு போத்தல்களை D யிடம் வாங்கினான். மிகுதியாக உள்ளதை லீற்றர் அளவில் தருக.

> நாம் சமைக்காது பச்சையாக உண்ணக் கூடிய கிழங்கு வகைகள், காய்கறிகள், கீரை வகைகள் பல உள்ளன. இவற்றை அளவுக்கதிகமாக வெப்பமேற்றுவதால் அவற்றிலுள்ள உயிர்ச்சத்துகள் அழிந்து விடுகின்றன.

சரியான விடையின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

(21) பச்சையாக உண்ணக்கூடிய கிழங்கு.
1. கரட் 2. பீற்றூட் 3. முள்ளங்கி

(22) பச்சையாக உண்ணக்கூடிய இலை.
1. முட்டைக்கோவா 2. வல்லாரை 3. முசுட்டை

(23) நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த உதவுவது?
1. புடோலங்காய் 2. பயற்றங்காய் 3. பாவற்காய்

சுருக்க விடை தருக.

(24) மருந்தாகப் பயன்படும் கிழங்கு எது?

(25) உயிர்ச்சத்து B உள்ள உணவுப் பொருள் ஒன்று தருக?

(26) உயிர்ச்சத்து A குறைவினால் உண்டாகும் நோய் ஒன்று தருக?

A பகுதியில் சில உபகரணங்கள் தரப்பட்டுள்ளன. B பகுதியில் அவ்வுபகரணங்களின் பயன்பாடுகள் தரப்பட்டுள்ளன. பொருத்தமானவற்றைக் கோட்டினால் இணைக்குக?

| A | | B |
|---|---|---|
| (27) நீர் மட்டம் | * | இரும்பைப் பதப்படுத்தல் |
| (28) கப்பி | * | மண்ணை வளமாக்கல் |
| (29) சீவுளி | * | பாரமான பொருட்களை ஏற்றுதல், இறக்குதல் |
| (30) மண்வெட்டி | * | ஏற்ற இறக்கம் பார்த்தல் |
| (31) துருத்தி | * | பலகையை மட்டமாக்குதல் |

I "மங்கையர் எல்லோரும் வாருங்கடி" என்ற இப்பாடல்.
i கும்மிப் பாடல் ii காவடிப் பாடல் iii கரகப் பாடல்

(44) அம்புலி மாமா வா எனக்கொரு ஆசை மொழி சொல்ல வா என்ற பாடல்
i சதுஸ்ர நடை ii திஸ்ர நடை iii கண்ட நடை

(45) தேசிய கீதத்தை மொழி பெயர்த்தவர்.
i ஆனந்தசமரக்கோன் ii நல்லையா பிள்ளை iii சோமசுந்தரப்புலவர்

**சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் எழுதுக.**

(46) காலையும் மாலையும் உடற் பயிற்சிக்குப் பொருத்தமான வேளையாகும்.

(47) உயரம் பாய்தல், ஈட்டி எறிதல் சுவட்டு நிகழ்ச்சியாகும்.

(48) போர்த் தேங்காய் அடித்தல் ஒரு போட்டி நிகழ்ச்சியாகும்.

(49) ஒட்டுச் சித்திரத்துக்கு கோழிச் சாயமும், வெண்டிக்காயும் பயன்படுத்தலாம்.

(50) அணி நடையின் போது முன்னுள்ளவரின் தோழிற்குப் பின்னால் வருபவரின் கைகள் உயர வேண்டும்.

(51) மின் அழுத்தி மின்சாரத்தை வெப்பசக்தியாக மாற்றும்.

(52) இரப்போர்க்கு இல்லை எண்ணாது வழங்குபவன் உலோபி.

**கீழே தரப்பட்டுள்ள பற்றுச் சீட்டுக்களை அவதானித்து (53 - 65) வரையான வினாக்களுக்கு விடை தருக.**

**அ.மு. சண்முகம்பிள்ளை அன் சன்ஸ்,**
**பலசரக்கு புடவை வியாபாரம்,**
**47, பிரதான வீதி, இரத்தினபுரி.**

திரு. ம.சி.அப்துல் அஸீஸ் 12.05.2002

| அளவு | விபரம் | விலை | |
|---|---|---|---|
| | | ரூபா | சதம் |
| 750 கிராம் | கருவாடு | 165 | 00 |
| 2 லீற்றர் 500மி.லீ | தேங்காயெண்ணெய் | 225 | 00 |
| 4 | பிளேன்சோடா | 240 | 00 |
| 2 கி. 250 கிராம் | பருப்பு | 234 | 00 |
| 4 பெட்டி | பிஸ்கற் | 260 | 00 |
| 1124/= | | 1124 | 00 |

| அளவு | விபரம் | விலை | |
|---|---|---|---|
| | | ரூபா | சதம் |
| 1.5 மீ | சீத்தை | 165 | 00 |
| 2 | தலையணை உறை | 120 | 00 |
| 3 | ஸ்கேட் | 675 | 00 |
| 75 செ.மீ | றேந்தை | 12 | 00 |
| 2 மீ 150 செ.மீ | இலாஸ்ரிக் | 43 | 00 |
| 1015/= | | 1015 | 00 |

(53) அப்துல் அஸீஸ், சண்முகம்பிள்ளை ஸ்தாபனத்தாருக்கு இரண்டு பற்றுச் சீட்டுக்களுக்குமாகக் கொடுக்க வேண்டிய பணத்தை சொல்லில் எழுதுக.

(54) ஒரு கிலோ கருவாட்டின் விலை என்ன?

(55) 5 பெட்டி பிஸ்கட் வாங்க எவ்வளவு பணம் வேண்டும்.

(56) ஒரு பிளேன்சோடாவின் கொள்விலையிலும் 5 ரூபா கூட வைத்து கடைக்காரர் விற்கிறார். ஒரு பிளேன்சோடாவின் கொள்விலை என்ன?

(57) 250 கிராம் பருப்பின் விலை என்ன?

(58) கடையில் 125 மில்லி மீற்றர் அளவுடைய 15 சம்போ போத்தல்கள் இருந்தன. அவற்றின் மொத்தக் கொள்ளளவு எத்தனை லீற்றர்?

(59) ஒரு லீற்றர் பிளேன்சோடாவின் விலை என்ன?

(60) ஒரு கிலோகிராம் பருப்பின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டது. 3.கிலோ கிராம் பருப்பு வாங்க எவ்வளவு பணம் தேவை?

(61) ஒரு தலையணை உறையின் விலை 15 ரூபாவால் அதிகரித்தது. 6 தலையணை உறை வாங்க எவ்வளவு பணம் தேவை?


(62) ஒரு சுவெற்றர் பின்னுவதற்கு 750 கிராம் றேந்தை தேவை. அதை வாங்க எவ்வளவு பணம் வேண்டும்?

(63) திரு.ம.சி.அப்துல் அஸீஸ் 1735.00 உடன் கொடுக்கிறார். பின் 204ரூபா கொடுக்கிறார். இன்னும் அவர் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?

(64) ஒரு மீற்றர் இலாஸ்ரிக் 6 காற் சட்டைகளுக்குப் போதுமானது. 15 காற் சட்டைகளுக்குப் போடுவதற்கான இலாஸ்ரிக் வாங்க இன்னும் எவ்வளவு பணம் வேண்டும்.

(65) ஒரு ஸ்கேட்டுக்கு 1.5 மீற்றர் சீத்தை தேவை. மிகுதிப் பணம் தையல் கூலியாகும். ஒரு ஸ்கேட்டின் தையல் கூலி எவ்வளவு?

பொருட்களிற்கு மாணவர்கள் அமைத்த விளையாட்டுப் பாதை சமிக்ஞைத் தொகுதி கீழே காட்டப்பட்டுள்ளது.




மின் குமிழ்கள் எரிவதற்கு மூடப்பட வேண்டிய ஆளிகளைக் குறிப்பிடுக.

மூடப்பட வேண்டிய ஆளி

(66) பச்சை ..............................

(67) சிவப்பு ..............................

(68) மஞ்சள் ..............................

## இன்று ஒரு தகவல்

# இராதையின் பெருமை

தூய உள்ளமும் தூய பக்தியும் கொண்டிருந்தால் தான் இராதையின் பெருமையைப் புரிந்து கொள்ள முடியும். ஸ்ரீ ராம கிருஷ்ணர், இராதையின் தனிப்பெரும் சிறப்பைப் பல தருணங்களில் உள்ளங்குழைந்து கூறியிருக்கிறார். ஒரு சமயம் தன் கோபாலனைப் பற்றியசெய்தி ஒன்றுமே யசோதைக்குத் தெரியாமல் இருந்தது. ஆகவே, அவள் இராதையிடம் சென்று, 'கோபாலனைப் பற்றிய செய்தி ஏதாவது உனக்குத் தெரியுமா' என்று கேட்டாள். அப்போது இராதை ஆழ்ந்த தெய்வீகப் பரவச நிலையில் தோய்ந்திருந்தாள். ஆகையால், யசோதை கேட்டது இராதையின் காதில் விழவில்லை.

சிறிது நேரத்துக்குப் பிறகு இராதைக்கு மெல்ல மெல்லத் தெய்வீகப் பரவச நிலை கலைந்து உலக நினைவு திரும்பியது. அப்போது நந்தனின் மனைவியாகிய யசோதை தன் முன்னால் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள் யசோதையைக் கண்டதும் உடனே இராதை அவரை வீழ்ந்து பணிந்துவணங்கினாள். பிறகு இராதை யசோதையிடம் தன்னைத் தேடிவந்ததற்கான காரணத்தை விசாரித்தாள். யசோதை காரணத்தைச் சொன்னதும், 'அம்மா! உங்களுடைய கண்களை மூடிக் கொண்டு கோபாலனின் உருவத்தைத் தியானியுங்கள். நீங்கள் அவனைக் காண்பீர்கள்' என்று சொன்னாள்.

யசோதை கண்களை மூடித் தியானிக்க ஆரம்பித்தாள். உடனே தூய பக்தியும் தூய தெய்வீகப் பரவச நிலையுமே வடிவெடுத்தவளாகியஇராதை தனது தெய்வீக சக்தியை யசோதையிடம் செலுத்தினாள். அதன் காரணமாக மறுகணமே யசோதையால் கோபாலனைக் காணமுடிந்தது. பிறகு யசோதை இராதையிடம் 'அம்மா! நான் கண்களை மூடிக் கொள்ளும் போதெல்லாம், என் அன்பிற்குரிய கோபாலனை நான் பார்க்கும்படியாக வரம் தந்தருள வேண்டும்' என்று சொல்லிப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

நன்றி
ஸ்ரீ ராம கிருஷ்ணர் சொன்ன கதைகள்

# கஷ்டப் பிரதேசகொடுப்பனவுஇல்லை

# ஆசிரியர்கள் பெரும் பாதிப்பு

## கல்வித் திணைக்களத்தில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் கஷ்டப்பிரதேசங்களில் கடமை யாற்றும் ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேச கொடுப்பனவு நீண்டகாலமாகவழங்கப் படவில்லையென பாதிக்கப்பட்ட ஆசிரியர் தரப்பில்புகார் தெரிவிக்கப்படுகிறது.

ஒருசிலர்மாத்திரமே இவ் அலவன்சை (100 ரூபாமாத்திரம்) பெறுவதாகவும் பெரும்பாலோருக்கு இப்பணம் கூட வழங்கப்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஷ்டப்பிரதேசம் என்ற வரையறைக்குள் வலயம் 1ல் வாதரவத்தை பாடசாலையும், வலிகாமம் வலயத்தில் குட்டியப்புலம் அ.த.க.பாடசாலையும் செயற்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இது விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களத்துக்கு அறிவித்தும் கூட எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட ஆசிரியர்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் மேற்படி கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்ற ஆசிரியர்கள் பலரும் பின்னடித்துவரும் இவ்வேளையில் கஷ்டப் பிரதேச அலவன்சை வழங்குவதில் அசமந்தப் போக்கு கடைப்பிடிக்கப்படுமானால் கஷ்டப்பிரதேச மாணவரின் கல்வி மேலும் பாதிப்படையலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சீருடையில் பணி

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் பலவருடங்களின் பின் தபால் ஊழியர்கள் சீருடை அணிந்துதமது வெளிக்களப் பணிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

தபால் திணைக்கள இலச்சினை பொறிக்கப்பட்டசேட், காற்சட்டை, தொப்பி, சப்பாத்து அணிந்து இவர்கள் பணி செய்து வருகின்றனர். (உ-59)

## கண்காட்சி

(கொழும்பு)

போர் நிறுத்த ஒப்பந்தம் 100 நாட்களைப்பூர்த்தி செய்ததை முன்னிட்டு தேசிய சமாதானப் பேரவை ''போக்கஸ் டீ +100'' என்னும் பெயரில் நிழற்படமற்றும் வீடியோ கண்காட்சியொன்றை கொழும்பு தேசிய கலைக் கல்லூரியில் திங்களன்று ஆரம்பித்துள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு அமைச்சின் அனுசரணையுடன் இன்று வரையான மூன்று நாட்கள் இக் கண்காட்சியை காலை 9.30 தொடக்கம் மாலை 6.30 மணிவரையும் பொதுமக்கள் பார்வையிடலாம். (உ)

கலந்துரையாடல்

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கோட்டக்கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள், மாணவத்தலைவர்கள் ஆகியோருக்கு நாளை நடைபெறவிருந்த கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சிவராஜா அறிவித்துள்ளார். (உ-3)

கொழும்பில் இன்றும் நாளையும்

## இலங்கைக்குஉதவிவழங்கும் குழுக்களின் கூட்டம்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கி வரும் குழுக்களின் கூட்டம் இன்றுகொழும்பில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள் மற்றும் இலங்கைக்கு உதவிவழங்கும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொள்ளும் இக்கூட்டம் கொழும்பில் இன்றும் நாளையும்நடைபெறவுள்ளது.

நாட்டில் தற்போது சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ளதால், பொருளாதார அபிவிருத்திகள் முன்னெடுத்துச் செல்லப்படும் இக்கால கட்டத்தில் இக்கூட்டம் முக்கியமான தொன்றாக பொருளாதார நிபுணர்களினால் கணிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் பங்களிப்புடன் இன்று ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில் ஜனாதிபதியும் கலந்து கொள்ளவுள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் குழுவின் இணைத் தலைவரான உலகவங்கியின் ஆசிய பிராந்தியத்துக்கு பொறுப்பான உபதலைவர் மீக்கோமி சுமிசுவும் இக்கூட்டத்தில்பங்கேற்பதற்காக தற்போது இலங்கை வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## கமகேயின் வீட்டுக்கு கைக்குண்டு வீச்சு

(கொழும்பு)

சிறு தேயிலைத் தோட்டங்களின் அபிவிருத்தி அதிகார சபையின் புதிய தலைவராக அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்லையினால் நியமிக்கப்பட்டுள்ள ரட்னா கமகேயின் கொழும்பு'ஹேரால்டன் பிளேசில் அமைந்துள்ள இல்லம் சனிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு கிரனேட் தாக்குதலுக்கு உள்ளானது.

எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படாத போதிலும் வீடும் காரும் சேதமடைந்துள்ளன.

இத்தாக்குதலின் பின்னணியில் இன்னுமொரு அரசாங்க அமைச்சரே இருப்பதாகவும்,

தான் தலைவராக நியமிக்கப்பட்டதை அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே ஆட்சேபித்ததாகவும் கமகேதெரிவித்துள்ளார்.

சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையில் 200-300 மில்லியன் வரையான நிதி மோசடி செய்யப்பட்டிருப்பதை தான் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்தே இத்தாக்குதல் சம்பவம்நடைபெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை விவசாயிகளின் உற்பத்திகளுக்கு நியாயமான விலைகள் வழங்கப்படவேண்டுமென்று கோரிகடந்த வருடம் வாஷிங்டனிலுள்ள உலக வங்கியின் முன் உண்ணாவிரத மிருந்ததன் மூலம் கமகே மிகவும் பிரபலமாகியியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## வலிகாமம் வலயத்தில் 35 பாடசாலைகளுக்கு மலசலகூட வசதிகள்

வலிகாமம்வலயத்தில் உள்ள 35 பாடசாலைகளுக்கு ஜேர்மன் தொழில் நுட்பநிறுவனத்தின் உதவியுடன் மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன;

மேற்படி வேலைத்திட்டமானது 3 மாதகாலத்தினுள் பூர்த்திசெய்யப்படவுள்ளது. (உ-252)

## மேலதிக மாவட்ட பதிவாளர்களுக்கு விரைவில் நிரந்தரநியமனம்

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கில் கடந்த பத்து வருடங்களாக இலிகிதர் சம்பளத்தில் மேலதிக மாவட்ட பதிவாளராக கடமையாற்றியவர்கள் அனைவரும் விரைவில் நிரந்தரமாக்கப்படுவார்கள் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி.அபேரத்ன அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்திடம் உறுதியளித்துள்ளார்.

மேலதிக மாவட்ட பதிவாளர் தரம் iii இல் உள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக பதிவாளர் நாயகத்துடன் கலந்துரையாடி அமைச்சரவைப் பத்திரத்தைசமர்ப்பித்து நிரந்தர நியமனம் பெறஉடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்,

1999 ஆம் ஆண்டுக்குப் பின்பு மேலதிக மாவட்ட பதிவாளர்களை நியமிப்பதில்லை என அமைச்சரவை எடுத்த தீர்மானத்திற்கு முன்னர், மேலதிக மாவட்ட பதிவாளர்களாக பணியாற்றியோர் நிரந்தரமாகும் வாய்ப்பை பெறுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார். (உ-3)

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நியமனம்

(சுதுமலை)

திருகோணமலையில் கடமையாற்றிய மூன்று பொதுச் சுகாதாரப்பரிசோதகர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணசுகாதார சேவைகள் பணிப்பாளரால் யாழ்.மாவட்டத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் வெற்றிடமாகவிருந்தமானிப்பாய், தெல்லிப்பளை, கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கோப்பாய், மானிப்பாய் தெல்லிப்பளை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கு மேற்பார்வை குடும்ப நல சேவை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-252)

## மயிலந்தனைப் படுகொலை மட்டு நீதிமன்றுக்கு வழக்கை

# மாற்ற சாட்சிகள் கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லைக் கிராமமான மயிலந்தனையில் 35 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கை மட்டக்களப்பு மேல் நீதிமன்றுக்கு மாற்றுமாறு சாட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1992ஆம் ஆண்டு செப்ரெம்பர் 9ஆம் திகதி அல்லைப்பிட்டியில் மேஜர் ஜெனரல் டென்ஸில்கொப்பேகடுவ படுகொலை செய்யப்பட்டதன் எதிரொலியாக மட்டக்களப்பில் இச் சம்பவம் இடம்பெற்றது தெரிந்ததே.

இது தொடர்பாக 23 இராணுவத்தினருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டவழக்கு பாதுகாப்புக் காரணங்கள் கருதி கொழும்புக்கு மாற்றப்பட்டது.

இதேவேளைமயிலந்தனைப் பொதுமக்கள் கல்மடு வில் அகதிகளாக வசித்து வருவதால் சாட்சிகள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கொழும்பு மேல் நீதிமன்றில் ஆஜராகி வருகின்றனர்.

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அமைதிச் சூழல் நிலவிவருவதால் இவ்வழக்கை மட்டக்களப்பு மேல் நீதி மன்றுக்கு மாற்றுவது சுலபமானது என்று சாட்சிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-9)

## சிந்தனைக்கு விருந்து

### சர்க்கரைத் தண்ணீர் தேன் ஆகின்றது!

மதுமதி மயக்க மதியிழந் தோர்க்கு
மதியுளோர் தேநீரை நிரப்பி
இதுதிறம் 'பிறண்டி' இரண்டுநா றேயாய்
என்றிடப் பெற்றனர் சீனி
அதுவுமில் லாத வெறுங்கஷா யத்தை
அருந்திய தால்மதி பெற்றார்!
கதையல ஈதுசர்க்கரைத் தண்ணீர்
தேனென விலைக்கின்று போகும்.

-பழையவன்

## தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆய்வுப்பட்டறை ஒன்றை நடத்துவதற்கு ஆயத்தம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில், புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள் பற்றிய ஆய்வுப்பட்டறை ஒன்றினை சாவகச்சேரியில் நடத்துவதற்கு தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கம் முயற்சித்து வருகின்றது.

இப் பிரதேசத்தில் பணிபுரிகின்ற அரச உத்தியோகத்தர்கள் மற்றும கிராமிய மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு புனர்வாழ்வு, புனரமைப்புச் சிந்தனைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய எண்ணக்கருக்களை உருவாக்குவதும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான பொதுவான வேலைத்திட்டங்களை இனங்காண்பதற்குமாக இவ்ஆய்வுப் பட்டறை மூலம் உரிய முன்மொழிவுகள் இனங்காணப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-77)

## விவசாய அபிவிருத்திக்கு இந்தியா உதவியளிக்கும்

(கொழும்பு)

இலங்கையின் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு இந்தியா உதவியளிப்பதென உறுதியளித்துள்ளது.

இதற்கமைய இந்தியாவில் விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் நவீன தொழில் நுட்பவசதிகள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

கமத்தொழில் கால் நடை வளர்ப்பு அமைச்சர் எஸ். பி.திஸநாயக்க விடுத்த வேண்டுகோளிற்கு இணங்கவே தாம் உதவி வழங்க முன்வந்துள்ளதாக இந்திய விவசாய நிபுணர் கலாநிதி எம். எஸ்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமாதான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து விவசாய நடவடிக்கைகள் யாவும் நவீனமயப்படுத்தப்பட்டுவரும் இவ்வேளையிலேயேவிவசாய நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## மீன்தொட்டியுள் வீழ்ந்து குழந்தை மரணம்

(அம்பாந்தோட்டை)

மீன்தொட்டியினுள்விழுந்த ஒன்றரை வயதுக் குழந்தை பரிதாபகரமாக மரணமடைந்துள்ளது.

அம்பாந்தோட்டை தெவிநுவரப்பகுதி வீடொன்றிலேயே இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் ரூபவாஹினி தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (உ-8)

## கம்பஹா பிரதி மேயர் கடத்தப்பட்டு கொலை

(கொழும்பு)

கம்பஹா பிரதிமேயர் சோமஸ்ரீசேனநாயக்கஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10 30 மணியளவில் யக்கல பகுதியில் வைத்து ஆயுதக் கோஷ்டியினால் பிரதி மேயர் கடத்தப்பட்டு பலமாக தாக்கிய பின்னர் கொலை செய்யப்பட்டிருப்பதாக கம்பஹா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்கி பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனிப்பட்ட குரோதம் காரணமாகவே 55 வயதான இவர் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (உ-9)

## பொது மலசல கூடமில்லை பொது மக்கள் அவதி

சாவகச்சேரி நகரத்தில் பொது மலசலகூடம் இல்லாமையினால் தென் பகுதியில் இருந்து வருவோர் மற்றும் பொதுமக்கள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாவதாகத் தெரியவருகின்றது.

முன்பு இருந்த பொது மலசல கூடம் யுத்தத்தின் போது சேதமடைந்த போதும் அவை இன்னமும் புனரமைப்புச் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி உலக வங்கி ஆசியப்பிராந்திய குழுவிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

அடுத்தகட்ட கட்டடப்பணிகளை ஆரம்பிப்பதற்கு வேண்டிய 460மில்லியன் ரூபாவை உடனடியாக வழங்கவேண்டும்என யாழ்தேசியகல்வியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் நேற்று முன்தினம் அங்கு விஜயம் செய்த உலகவங்கி ஆசியப்பிராந்திய குழுவிடம் கோரிக்கை விடுத்துளளார்.

இதுகுறித்து பீடாதிபதி கமலநாதன் கையளித்துள்ள மகஜரில்,

யாழ் தேசியகல்வியியற் கல்லூரி 2000 ஆண்டு மே மாதம் ஆரம்பமாகியமை நீங்கள் அறிந்ததே. அன்றுதொடக்கம் கல்லூரி கோப்பாய் ஆசிரிய பயிற்சிகலாசாலையில் இயங்கி வருகிறது.

இக்கல்லூரி 67பேருடன் ஆரம்பமாகிய போதிலும் தற்போதுஎல்லாமாக 300 மாணவஆசிரியர்கள் இணைக்கப்பட்டுளளனர்.

தற்போது கிடைக்கின்ற இடவசதியுடன் இப்பயிற்சியாளர்களுக்கு தங்குமிடவசதியினை வழங்குவதென்பது மிகவும் சிரமமான பணியாக உள்ளது.

ஒருஇடைக்காலஏற்பாடாக கல்லூரிக்கான 35 மில்லியன் நிர்மாணத்திட்டம் நல்ல முறையில் நடைபெறுகிறது. ஆனால், இக்கட்டடமானது கல்லூரியின் ஒருஆரம்பத் தேவையை மாத்திரம் நிறைவு செய்யப்போதுமானது.

ஆகவே அடுத்த460மில்லியன் கட்டடத்திட்டத்தை முடிந்தவரை விரைவில்ஆரம்பிக்கவேண்டியது அவசரத் தேவையாகும். நாட்டு நிலைமைநன்றாக இருக்கிறது எ-9 பாதையும் பொதுப் போக்கு வரத்துக்குத் திறக்கப் பட்டுள்ளது.

கல்லூரிக்கான 460மில்லியன்திட்டத்தின் கட்டடப் பணிகள் ஆரம்பமாவதற்கு உடனடிநடவடிக்கை எடுத்தால் நன்றியுடையவனாக இருப்பேன். முன்மொழியப் பட்டகட்டடம் கல்லூரியின் மிக அவசரமான காலத்தின் தேவையாகும் உடனடியாக நடவடிக்கை எடுப்பீர்கள்என எதிர்பார்க்கின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்தமொறகொட, பாடசாலைக்கல்வி அமைச்சர் சுரநிமலராஜபக்ஷ அரசாங்க அதிபர் கே.சண்முகநாதன் மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் எஸ். சிவராஜா ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ-10,2)

## அதிர்ஷ்டசாலிகளுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கரணவாய் வடக்கு எள்ளங்குளம் முத்துமாரி அம்மன் (நாச்சிமார்) தேவஸ்தான கட்டட நிதிக்காக 26 ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டபோது, அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்டு இதுவரை பரிசில்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் 10 ஆம் திகதிக்கு முன் தேவஸ்தானதிருப்பணிச் சபையுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## பொருளாதார அபிவிருத்தி அடுத்த வருடமே

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை அடுத்த வருடமே எதிர்பார்க்கலாம் என்று இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ச்சுன மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையில் முன்னேற்றம் காணப்படும் வேளையில் மாத்திரமே இதனை எதிர்பார்க்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். (உ-9)

## தேசியமட்ட போட்டி

(ஈச்சமோட்டை)

கரித்தாஸ்,இலங்கைசெடேக் ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் தெரிவாகிய தேவரையாளிஇந்துக் கல்லூரியின் இன்னும் மிதக்கிறதுநம்பிக்கை எனும் நாடகம்தேசிய மட்டப்போட்டியில் பங்கேற்கவுள்ளது.

எதிர்வரும்7 ஆம் திகதிஇப் போட்டிகொழும்பில் நடைபெறவுள்ளது. (உ-59)

### புனரமைப்பதில் அசமந்தப் போக்கு

## பேருந்து நிலையத்தைபனை ஓலையால் வேய முயற்சி

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தில் அமைந்துள்ளபேருந்து பிரயாணிகள் தங்குமிடம் பலத்த சேதமடைந்து இருப்பதனால் பேருந்துக்காக காத்து நிற்கும் பொது மக்கள் மற்றும் பாடசாலைப் பிள்ளைகள் கடும் வெய்யிலில் தரித்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சேதமடைந்த நிலையிலுள்ள இத்தங்குமிடத்தைப் புனரமைப்புச் செய்யும் படி பல பொது அமைப்புகளும், வரியிறுப்பாளர்களும் சாவகச்சேரி நகரசபையை கோரியிருந்த போதிலும்,அது இன்னமும் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இதேவேளை சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் இது விடயம் பற்றி சாவகச்சேரி நகரசபையிடமும் தென்மராட்சி பிரதேச செயலரிடமும் தெரிவித்துள்ளது.

சாவகச்சேரி நகரசபை இதனைப் புனரமைப்புச் செய்யத் தயங்கும் பட்சத்தில், பனை ஓலை கொண்டு இந்த பஸ் தரிப்பு நிலையம் வேயப்படும் எனபாதிக்கப்படும் பொதுமக்கள்சிலர் தெரிவித்துள்ளனர். (உ-77)

## வெடிக்காத நிலையில் 3 குண்டுகள்

(தென்மராட்சி)

சாவகச்சேரி மாவட்டவைத்திய சாலைக்கு அருகிலுள்ள வளவில் இருக்கும் கிணற்றில் வெடிக்காத நிலையில் மூன்று ஷெல்கள் இருப்பதாக அப்பகுதி கிராம உத்தியோகத்தர் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவிடம் அறிவித்துள்ளார். (உ-77)

### பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்

## கைதான தமிழ்ப் பெண் மீதான வழக்குகள் வாபஸ்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிவரஜினி என்பவருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இருவழக்குகளையும் சட்டமா அதிபர் திணைக்களம்வாபஸ் பெற்றதையடுத்து மேற்படி பெண் ஞாயிறன்று விடுதலை செய்யப்பட்டார்.

புலிகளுக்கு உதவியதென்ற சந்தேகத்தின் பேரில், 2001 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி தெஹிவல பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின் பம்பலப்பிட்டி பொலிஸாரிடம் இவர் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

அவ்வேளை, பாலியல் வல்லுறவிற்கும், சித்திரவதைகளுக்கும் உட்பட்டிருந்ததாக மனிதவுரிமை வழக்கொன்றையும் தாக்கல் செய்திருந்தார். (உ)

## சவுதி பாராளுமன்ற தலைவர் இலங்கையில்

(கொழும்பு)

ஷூரா கவுண்சில் எனப்படும் சவுதி அரேபிய பாராளுமன்றத்தின் தலைவர் அல்-ஷீக் டாக்டர் ஷாலி பின் ஹுமெய்ட் தலைமையில் 12 எம்.பிக்களை கொண்ட குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

இவர்கள் இலங்கையின் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் விருந்தினராக இங்கு தங்குவார்கள்.

இங்கு அவர்கள் முக்கிய அரசியல் தலைவர்களையும்,முஸ்லிம் தலைவர்களையும் சந்திக்கவுள்ளனர்.

பாராளுமன்றத்திற்கு நேற்று விஜயம் செய்த இவர்கள்,சவுதி- ஸ்ரீலங்கா பாராளுமன்ற சங்கம் ஒன்றையும் தொடக்கி வைத்துள்ளனர்.

எதிர் வரும் 7 ஆம் திகதி இக் குழுவினர், இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்துவதற்காக அல்லாவை வேண்டும் விசேட தொழுகைகளிலும் ஈடுபடுவர். (உ)

### ஐரோப்பிய விஜயத்தை முடித்து நாடுதிரும்பிய பிரதமர்

## அடுத்தகட்ட சமாதான நகர்வு பற்றி முக்கிய அமைச்சர்களுடன் ஆராய்வு

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு கடந்த சனியன்று நாடு திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அடுத்த கட்ட சமாதான நகர்வு தொடர்பாக முக்கிய அமைச்சர்களுடன் கடந்த ஞாயிறுக்கிழமை ஆலோசனை நடத்தியுள்ளார்.

பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், இணைச் செயலாளர்பேனாட் குணதிலக ஆகியோர் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கு கொண்டிருந்தனர்.

இதேவேளை, ஜூலை மாத இறுதியில் தாய்லாந்தில் சமாதானப் பேச்சுக்களை நடத்துவது என்ற அடிப்படையில் தமது முன்னெடுப்புகள் இடம்பெற்று வருவதாகவும்,


கடந்தவாரம் கொழும்பு வந்து சென்ற நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் இவ்வாரம் விடுதலைப்புலிகள் தரப்பைச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் பேச்சுவார்த்தைக்கான அனுசரணையாளராகச் செயற்பட்டுவரும் நோர்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடார் ஹெல்கீசன் கடந்த செவ்வாயன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பிறசல்ஸில் சந்தித்துப் பேசியுள்ளமை தெரிந்ததே.

இது இவ்விதமிருக்க, இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவு திரட்டும் வகையில், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பிரான்ஸ், கனடா ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருப்பதாகவும்,

அங்கு, தமிழர் அமைப்புகள், பொதுநல அமைப்புகளின் ஆதரவைப் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதுடன்,

பேச்சுவார்த்தைக்கு முன்னதாக புலிகள் மீதான தடையை நீக்குதல் மற்றும் பேச்சுக்களில்,வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகத்தை புலிகள்வசம் ஒப்படைப்பது தொடர்பாக முதலில் பேசுவது தொடர்பான கருத்துக்களை அங்கு அவர் வலியுறுத்தி வருவதாகவும் கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்துள்ளது. (உ)



ஆக்கப்பாடத்திற்கு யூட்ரெனிஸ் என்ற மாணவன் செய்த உருவம் இது

(69) சில்லாகப் பாவிக்கப்படும் பொருள் எது?

(70) நகர உதவி செய்வது எது?

கீழேயுள்ள தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.

(71) கால்கள்.............................. (72) வால்..........................

(73) கிழக்கு .............................. (74) வித்தியாலயம்.........,.........

" நான் எனது பாடசாலை அதிபரின் வீட்டுக்குச் சென்றேன்" என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக?

(75).............................................................................................

(76).............................................................................................

(77).............................................................................................

(78).............................................................................................

(79).............................................................................................

(80).............................................................................................

குறிப்பு:-

அன்பு மாணவச் செல்வங்களே! விடைகளை வேறு தாளில் எழுதி 11.06.2002 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## கல்விப் பகுதி

வினாத்தாள் 11
"வலம்புரி",
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர் :- ..................................................

சொந்த முகவரி :- ..................................................

கற்கும் பாடசாலை :- ..................................................

இப் படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாள்களுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

## தரம் 05 புலமைப்பரிசில் முன்னோடி வினாத்தாள் 11 பகுதி I இல் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்.

01. அ. துளசி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
02. த.கோகுலன், நவாலி அட்டகிரீ சைவவித்தியாசாலை.
03. த.கபிலேசன், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
04. வி.தீபன்ராஜ், ஆனைப்பந்தி மெ.மி.வி.
05. க.திவ்யா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
06. பா.சுயாத்தா, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
07. இ.துவாராகா,கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை.
08. டி.டியோனிஸ்கூரே, மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்.
09. ச.கணேஸ்பரன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
10. இ.சிந்துயன், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
11. கு.லேகா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
12. கு.தமிழ்மதி, மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்.
13. ம.நிவந்தன்.. சைவப்பிரகாச வித்தியாசாலை.
14. இ.அஜந்தன், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
15. தி.துஷாந்தி, வயாவிளான், மத்திய மகா வித்தியாலயம்.
16. வ.செல்வகுமரன், கைதடி குருசாமி வித்தியாலயம்.
17. வி.விஜதா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
18. த.அராஜினி, கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம்.
19. க.உதயராஜ், இந்து ஆரம்பப் பாடசாலை.
20. யோ.திருக்கணேசன், வல்வை அ.மி.த.க.பாடசாலை.
21. கு.சந்திரகுமாரி, வல்வை மகா வித்தியாலயம்.
22. ர.சரண்யா, வல்வெட்டித்துறை றோ.க.த.க.பாடசாலை.
23. ச.சமீரா, யா.உ..சை.த.வி.
24. இ.மதனிகா, வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
25. ப.குபேரன், மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்.
26. வா.நிலாணி, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
27. பா.பிறேமசியா, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
28. இ.நிரோசன், இந்து ஆரம்பப் பாடசாலை.
29. த.சலுயா, நவாலி மகா வித்தியாலயம்.
30. தா.பிரகதீஸ்வரசர்மா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
31. பு.கோபிநாத், வல்வை சிவகுரு வித்தியாசாலை.
32. வே.ஜெயவதனி, வல்வை அ.மி.த.க.பாடசாலை.
33. பி.நந்தினி, வ.ம.ம.வித்தியாலயம்.
34. அ.ஜெரிஜோண்சன், மத்திய கல்லூரி.
35. பி.யோபிதா, வல்வை சிவகுரு வித்தியாசாலை.
36. து.பிரியந்தி, கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை.
37. வ.லக்ஸ்மன், மானிப்பாய் சென் ஆன்ஸ்.
38. ஜெ.கிறிஸ்ரிக்குமார், மத்திய் கல்லூரி.
39. க.மதுரராகரன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
40. தே.சமீனா, இருபாலை சீ.சீ.த.க பாடசாலை.
41. ம.றோசான், கொக்குவில் இந்து ஆரம்பப் பாட்சாலை.
42. மோ.சஞ்சயன், மத்திய கல்லூரி.
43. வ.றேணுகன், விவேகானந்த வித்தியாசாலை.
44. சு.அருணியா, விவேகானந்த வித்தியாசாலை.
45. ஸ்ரீ.பிரவீனா, இந்து ஆரம்பப் பாடசாலை.
46. த.நாராயணி, இணுவில் மத்திய கல்லூரி.
47. சி.ஜனகன், சென்ஜோன்ஸ் கல்லூரி.
48. கெ.மயூன், மத்திய கல்லூரி.
49. அ.தேவதாஸ், மத்திய கல்லூரி.
50. ஜோ, நிலக்ஷன், மத்திய கல்லூரி.
51. ப.மதுசாந், தமிழ் கந்தையா வித்தியாலயம்.
52. ம.நிகிந்தன், மீசாலை வீரசிங்கம் ம.வி.
53. த.பிரணாளன், தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை.
54. செ.கோபிகா, கோண்டாவில் இ.ம.வி.
55. ச.சக்திபாலன், தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.
56. அ.கஸ்தூரி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
57. அ.கோபிநாத், கொக்குவில் சீ.சீ.த.க.பாடசாலை.
58. ச.திபாகர், இந்து ஆரம்பப் பாடசாலை.
59. வி.கிரிஜா, நீர்வேலி, சீ.சீ.த.க.பாடசாலை.
60. க.வாகீசன், புனித ஜோன்பொஸ்கோ.
61. ம.வேஜினி, நாவாந்துறை றோ.க.த.க.பாடசாலை.
62. த.வஜீதா, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை.
63. க.சுதர்சன், மத்திய கல்லூரி.
64. க.சாய்ராம், உரும்பிர்ாய் றோ.க.த.க.பாடசாலை.
65. கு.சென்போல், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
66. கு.சுமங்கலி, உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை.
67. வ.சரவணன், வேலணை ஐயனார் வித்தியாலயம்.
68. அ.கீதன், பளை மத்திய கல்லூரி.
69. சோ.அஜந்தா, நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை.
70. அ.அனுஸ்ரிக்கா, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
71. யோ.சுகன்யா, உரும்பிராய் றோ.க..த.க.பாடசாலை.
72. பா.ஸ்ரீகுகன், யாழ்ப்பாணக் கல்லூரி.
73. சி.அனித்தா, கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம்.
74. க.தனுசன், உரும்பிர்ாய் றோ.க.த.க.பாடசாலை.
75. ஸ்ரீ.தருசன், இந்து ஆரம்பப் பாடசாலை.
76. சா.துசாந்தன், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
77. நி.பகீர்த்தன், கோ.வ.றோ.க.த.க. பாடசாலை.
78. சோ.சிந்துகேயன், மத்திய கல்லூரி.
79. சு.சூரியா, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
80. ச.துசிந்தன், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
81. அ.சரண்ஜா, கோப்பாய் றோ.க.த.க.பாடசாலை.
82. ஞா.தினேஸ்றைமன், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
83. த.துவாரகன், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
84. வி.சஞ்சீவன், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
85. ஞா.சாம்சன், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
86. செ.சரணியா, ஏழாலை மகா வித்தியாலயம்.
87. செ.சிந்துஜா, உடுவில் முருக மூர்த்தி வித்தியாலயம்.
88. ஆ.சயந்தினி, ஏழாலை மகா வித்தியாலயம்.
89. சே.நிரோசினி, திருக்குடும்பக் கன்னியர் மடம்.
90. செ.ஜெகப்பிரியா, சென் ஜோண் பொஸ்கோ.
91. கு.டினிஸ்சன், ஏழாலை மகா வித்தியாலயம்.
92. சு.தசாங்கன், ஏழாலை மகா வித்தியாலயம்.
93. யோ.அசாத், அளவெட்டி றோ.க.த.க.பாடசாலை.
94. இ.தபேஸ், ஏழாலை மகா வித்தியாலயம்.
95. கா.திவேயன், ஏழாலை மகா வித்தியாலயம்.
96. செ.சிவேஸ், அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.
97. கு.நிஷாகரன், தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.
98. சி.சிந்துயன், ஏழாலை மகா வித்தியாலயம்.
99. கு.தான்சன், ஏழாலை மகா வித்தியாலயம்.
100. ர.கௌதமி, சென்ஜோண் பொஸ்கோ.
101. து.துவாரகன், ஏழாலை மகா வித்தியாலயம்.
102. ச.சஞ்சீவன், ஏழாலை மகா வித்தியாலயம்.
103. மோ.கின்ராஜ், ஏழாலை மகா வித்தியாலயம்.
104. வை.மதுவந்தி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
105. இ.தர்சிகா, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
106. த.துவாரகன், கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம்.
107. ச.மஞ்சூரி, மயிலணி சைவ மகா வித்தியாலயம்.
108. ச.மதுரா, மயிலணி சைவ மகா வித்தியாலயம்.
109. ச.யர்சினி, ஐயனார் வித்தியாலயம்.
110. சு.மைதிலி, நெ.மெ.மி.த.க.பாடசாலை.
111. S.விதுரன், சென் ஜோண் பொஸ்கோ.
112. கு.தக்ஷா, இந்து ஆரம்பப் பாடசாலை.
113. த.அஜந்தன், இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை.
114. ஜோ.சன்யுதா, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
115. வி.தனுஷன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
116. மா.சிவசுதன், கோண்டாவில் சீ.சீ.த.க.பாடசாலை.
117. சி.சிந்துசகலா, மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
118. எம்.ஜோண்பிரியந், சென் ஜோண்ஸ்
119. ச.கோகிலன், மத்திய கல்லூரி.
120. ச.ஏஞ்சல் நிவேதிகா, உடுவில் மகளிர் கல்லூரி.
121. ந.கௌசிகா, தும்பளை சிவப்பிரகாச ம.வி.
122. தி.நகுலராஜ், கற்கோவளம், மெ.மி.த.க.பாடசாலை.
123. ஜோ.கஜீந்தன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
124. ஜெ.நிவிதா, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
125. பா.சன்முகப்பிரியா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
126. வ.நிரோசாந், சென் ஜோன்ஸ் கல்லூரி.
127. ப.விஷ்ணுயன், இந்து ஆரம்பப் பாடசாலை.
128. ஜெ.நிர்மலன், மகேஸ்வரி வித்தியாசாலை.
129. தெ.யாழினி, சென்ஜோண் பொஸ்கோ.
130. க.கஜீபராஜ், வியாவிளான் மகா வித்தியாலயம்.
131. அ.கஜானி, கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம்.
132. மு.குணாதரன், காசிநாதர் வித்தியாலயம்.
133. ப.ஆரணி, தாவடி இ.த.க.பாடசாலை.
134. ச.பிரியதர்சினி, சங்கானை சி.ம.வி.
135. ப.லக்ஷனா, சங்குவேலி அ.த.க.பாடசாலை.
136. சி.கபிலன், உடுவில் மகளிர் கல்லூரி.
137. யோ.சத்தியரஞ்சித், உடுவில் மகளிர் கல்லூரி.

## கடந்தவாரம் வெளியான வினாக்களுக்கான விடைகள்

01. 3
02. 2
03. 3
04. 3
05. 1
06. 120
07. 4
08. 2
09. 3
10. 3
11. 3
12. 1
13. 2
14. மகன்
15. 6 வருடங்கள்
16. உருத்திராவின் மனைவி
17. ஒரு மகன் ஒரு மகள்
18. இந்து
19. கொழும்பு
20. யாழ்ப்பாணம்
21. ஆம்
22. ஓம்
23. ஓம்
24. ஆம்
25. 3
26. 2
27. கோயிலில்
28. தபாற்கந்தோர்
29. பாடசாலை
30. 9.30
31. 10.00
32. 5

33-36. ஆமை, பாம்பு பற்றிப் பொருத்தமான வசனங்கள்.

37. மேற்கு
38. பொருத்தமானது
39. தலைப்பாகை
40. மரக்கிளையின் மேல்

## சட்டமா அதிபரிடம் ஆலோசனை

(கொழும்பு)

குடிவரவு, குடியகல்வு சட்டத்தை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விடுவிப்பது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டுள்ளதாக சட்டத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்களை விடுவிப்பதற்கு முன்னர் அரசதரப்பு சாட்சியங்களை நியமிப்பதன் சாத்தியம் பற்றி சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

போலிக் கடவுச் சீட்டுகளையும், விசாவையும் பயன்படுத்திச் சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்ல முயன்றவர்கள் பலர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

போலி ஆவணங்களை தயாரிப்பவர்களுக்கு எதிராகச் சாட்சியம் அளிக்கும் பட்சத்திலேயே இவர்களை விடுதலை செய்ய முடியும் எனவும் சட்டமா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ - 8)

## தமிழீழத்தின் வனவளத்தைப் பாதுகாக்க விடுதலைப் புலிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஒரு தேசத்தின் பிரதான வளமாகத் திகழ்வது இயற்கையே. இயற்கை தான் உயிரின வாழ்வியலில் முக்கிய பங்கை வகிக்கின்றது.

எனவே நாம் இயற்கையோடு இணைந்திருத்தலும், அதனை அனுசரித்துச் செல்லுதலும் இன்றியமையாததாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வனவளப் பாதுகாப்புப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும், மேற்குறிப்பிட்ட வகையில் இன்று மரங்களின் முக்கியத்துவத்தை நாம் அறிவியல் ரீதியாக வெளியாகும் ஊடகச் செய்திகள் மூலம் அறிகின்றோமல்லவா? இருந்தும் கூட நாம் மரங்களைப் பற்றி அறிய விரும்புகின்றோமா? மரங்களைப் பாதுகாக்கின்றோமா? மரங்கள் அருகி வருவதால் ஏற்படப் போகும் விளைவுகள் பற்றிச் சிந்திக்கின்றோமா? மாறாக மரங்களை அழிவுக்கு உட்படுத்துகின்றோம் என்பதே உண்மை.

இப்படியாக எமது தேசத்தின் தேசிய வளமான மரங்கள் அழிந்து கொண்டு போவதை உடனடியாகத் தடுத்து நிறுத்திப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்ட தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவானது, வன்னிப்பெரு நிலப்பரப்பில், ''அனுமதியின்றி மரங்கள் தறிப்பதை முற்றாகத் தடை செய்து" மரங்களைக் காக்கும் மகத்தான பணியை மேற் கொண்டு வருகின்றது.

இந்தச் சிறப்பான கைங்கரியத்திற்கு ஒத்துழைப்பு நல்கிய எமது மக்களை நாம் நன்றிக் கண்ணால் நோக்குகின்றோம்.

இது தவிர தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவினராகிய நாம் இக்கணத்தில் இருந்தே ஏனைய மாவட்டங்களிலும் அனுமதியின்றி மரங்கள் தறிப்பதை முற்றாகத் தடை செய்துள்ளோம் எனும் உத்தரவைப் பிறப்பிக்கின்றோம்.

எனவே, அனைத்து மக்களும், இவ்வுத்தரவை மீறாது இத்தேசியப் பணிக்கு பேராதரவு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வளங்களை அழிப்பது வாழ்க்கையை அழிப்பது போலாகும். அதிலும் மரங்களை அழிப்பதென்பது ஒரு சந்ததியை அழிப்பதிலும் கொடுமையானதாகும்.

அனைத்து மக்களையும், இத்தேசம் செழிப்புடன் திகழ எமது தேசம் காக்கும் நற்பணிக்கு பாசக்கரம் நீட்டுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எம்மால் பிறப்பிக்கும் இத்தடை உத்தரவை மீறுவோர்கள் மீது ஒழுங்காற்று நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந)

## ஆசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடிவு

(புதுடில்லி)

ஆசிய பொருளாதாரத்தின் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் விதத்தில் தகவல் தொழில் நுட்பத்துறையை பலப்படுத்தி கூட்டு உயர்திட்டத்தை மேற் கொள்வதென இந்தியா உட்பட 25 ஆசிய நாடுகள் முடிவெடுத்துள்ளன.

தென்கொரிய தலைநகர் சியோலில் அண்மையில் நடைபெற்று முடிந்த ஆசிய தகவல் தொழில்நுட்ப அமைச்சர்களின் இரண்டு நாள் மாநாட்டில் இந்தமுடிவு எடுக்கப்பட்டதோடு, மேலும் அடுத்த ஆண்டில் இம் மாநாட்டை இந்தியாவில் நடத்தவும் திட்டமிடப் பட்டுள்ளது. (உ-4)

## தலிபான் இயக்கத்தின் தலைவர் முல்லா இன்னும் உயிருடன் உள்ளார்

### ஆப்கான் அமைச்சர் உறுதிப்படுத்துகிறார்

(காபூல்)

உலகில் அதிகம்தேடப்படும் நபர்களில்ஒருவரானதலிபான் இயக்கத்தின்தலைவர் முல்லா முஹமட் ஓமர் இன்னும் உயிருடன் இருப்பதாக ஆப்கானிஸ்தான் இடைக்கால அரசியல் உள்துறை அமைச்சர் யுனிஸ் குவாமின் தெரிவித்துள்ளார்.

உயிருடன் இருக்கும்முல்லா தனது நேரத்தின் பெரும் பகுதியை ஆப்கானிஸ்தானுக்கு வெளியிலேயேசெலவிடுவதுடன், ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் பாகிஸ்தான் எல்லையில் உள்ள மலைப் பகுதியில் ஒளிந்திருப்பதாகவும்,

இப்பகுதி கட்டுப் பாட்டுக்குள் வாராத காரணத்தால் ஆப்கான் படைகளும் ஆப்கானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளும் முல்லாவை பிடிக்கமுடியாதுஇருப்பதாகவும் யுனிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சர்வதேச தீவிரவாதியான ஒசாமா பின்லேடனை தன்பாதுகாப்பில் வைத்திருக்கும் தலிபான் இயக்கத்தின் தலைவர் முல்லா உயிருடன் இருப்பதாக ஆப்கான் அமைச்சர் ஒருவர் உறுதியாக கூறியிருப்பது இதுவே முதல் தடவையாகும். (உ-9)

## விமானப்படைத் தளம் சல்லடை போட்டு தேடுதல்

தெற்கு டில்லியின் ஆஜா நகர்ப்பகுதியில் உள்ள விமானப்படைத் தளத்தினுள் அண்மையில் இரவு ஆயுதம் தாங்கிய படைகள் நுழைந்து விட்டதாக செய்திகள் வெளியாகியதையடுத்து புதுடில்லிப் பொலிசாரும், விமானப்படை வீரர்களும் நள்ளிரவில் அங்கு கடும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சோதனை நடவடிக்கையில் அங்கு எவருமே அகப்படவில்லை.

பயங்கரவாதிகள் ஊடுருவியிருப்பதாக அனாமதேய தொலைபேசி அறிவிப்புவிடுக்கப்பட்டதையடுத்தே இந்த தேடுதல்வேட்டை இடம்பெற்றது. (உ-4)

# உலக தரிசனம்

## மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் அவசியம் மலேசியா வலியுறுத்து

(கோலாலம்பூர்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயானயுத்த ஆபத்தைத்தவிர்ப்பதற்குமூன்றாவது நாடொன்றின் தலையீடு அவசியமென்று மலேசியப்பிரதமர் மகியட்மொகமட் தெரிவித்துள்ளார்.

இவ்விரு நாடுகளிடையும் இருந்துவரும் யுத்தமுனைப்புக்களை மலேசியா அங்கீகரிக்கவில்லை.

இவ்விருநாடுகளும் தமக்கிடையே தீர்வுகாணமுடியாதநிலையிலேயே மூன்றாம் தரப்பு அவசியம்எனக் குறிப்பிட்ட அவர் அமெரிக்க, ரஷ்யா, ஐக்கியநாடுகள் சபை ஆகியன இப்பணியைமேற்கொள்ளமுடியும் எனவும்தெரிவித்துள்ளார். (உ-8)

## 6 இலங்கையர் தனுஷ்கோடியை சென்றடைவு

(புதுடில்லி)

இலங்கையிலிருந்து 6 பேர் கொண்ட ஒரு குடும்பம் கடல் வழியூடாகதனுஷ்கோடியைச் சென்றடைந்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்குமிடையே போர் நிறுத்தஒப்பந்தம்நடைமுறையிலிருக்கும் இவ்வேளையில்சிறிது காலஇடைவேளைக்குப் பின்னர் 6 இலங்கைத் தமிழர்கள் இந்தியா சென்றிருப்பதை அதிகார பூர்வ வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. (உ-4)

## எந்தமுடிவையும் இந்தியா அவசரப்பட்டு எடுக்காது

### பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

சிங்கப்பூரில் ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் எல்லைப்புறத்தில் நிலவும் பதற்றமானசூழ்நிலையில் இந்தியா எந்தவித முடிவையும் அவசரப்பட்டு எடுக்காது என்றார்.

அவர்மேலும் கூறுகையில்; பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இந்தியா முனைந்து செயற்பட்டுக்கொண்டேயிருக்கும்.

அணு ஆயுதங்களை பயன்படுத்தப்போவதாக பாகிஸ்தான் விடுத்துள்ள அச்சுறுத்தல், இந்தியாவையும் உலக சமுதாயத்தையும் மிரட்டி தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளவும், எல்லை கடந்த பயங்கரவாதம்என்ற உண்மையான பிரச்சினையிலிருந்து உலக நாடுகளின் கவனத்தை திசை திருப்புவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சியேஎன்றார்.

இந்தியாவின் அணு ஆயுத வல்லமை தற்பாதுகாப்புக்காகவே பயன்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார்.

இதனிடையே, இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் அமைச்சர்கள் பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் பொதுக்கருத்தொன்றை எட்டியுள்ளனர்.

உலகளாவியரீதியில்பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியம்என்றும் அவர்கள் கருத்துத்தெரிவித்தனர்.

இதேவேளை, தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை பாகிஸ்தான் மேற்கொள்ள வேண்டுமென்ற சர்வதேச அழுத்தத்தை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமையன்று தடைசெய்யப்பட்ட சில தீவிரவாத அமைப்புக்கள் ரகசிய கூட்டமொன்றை பாகிஸ்தானில் பெயர் தெரிவிக்கப்படாத இடமொன்றில் நடத்தியுள்ளன.

இக்கூட்டத்தில் தமது தீவிரவாத அமைப்புக்களின் சக்தியை ஒடுக்க அந்நாட்டு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியை கூட்டாக எதிர்க்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவருகின்றது. (உ-4)

## பாகிஸ்தானிலுள்ள 115 சமயப் பள்ளிகளுக்கு நிதி உதவி நிறுத்தம்

(இஸ்லாமாபாத்)

தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டது சம்பந்தமான குற்றச்சாட்டின் அடிப்படையில் பாகிஸ்தான் முழுவதும் இயங்கி வந்த 115 சமயப் பாடசாலைகளுக்கு அளித்து வந்த நிதி உதவியை நிறுத்தி விட்டிருப்பதாக அந்நாட்டு கல்வி நிர்வாகம் அறிவித்திருக்கின்றது.

இந்தப் பாடசாலைகளுக்கு இனி மேல் நிதி உதவி கிடைக்காதென்றும் இப்பாடசாலைகளின் நடவடிக்கைகள் உன்னிப்பாக கவனிக்கப்படுமென்றும் பாகிஸ்தான்கல்விக் குழு உறுப்பினர் முப்தி அப்துல்காவி கடந்த திங்கட்கிழமை முப்தானில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (உ-4)

## மாணவர் சென்ற பஸ்வண்டி மீது துப்பாக்கிச் சூடு

(பாங்ஹொங்)

பாடசாலை பஸ் வண்டி ஒன்றின்மீது தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 2 மாணவர்கள் பலியானதுடன் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை தாய்லாந்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (உ-8)

## ரஷ்யப் பெண்கள் வட தென் துருவங்களுக்கு சென்று சாதனை

(லண்டன்)

ஆன்டானியல்ஸ், செரலின் கமில்றன் ஆகிய இரு பிரிட்டிஷ் பெண்மணிகள் வடதென் துருவங்களுக்கு சென்று வந்த உலகின்முதல் பெண்கள என்ற சாதனையைப் படைத்துள்ளனர்.

12 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவை கடுமையான முயற்சியினால் 81 நாட்களில் கடந்து இவர்கள் வடதுருவத்தை சென்றடைந்துள்ளார்கள்.

2 வருடங்களுக்கு முன்பு தென்துருவம் சென்று வந்த ஐந்து பெண்கள் குழுவிலும் இவர்கள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-4)

## கடத்தப்பட்ட அமைச்சர் சடலமாக மீட்பு

(லண்டன்)

ஒந்தராஸின் முன்னாள் பொருளாதார அமைச்சர் ரெஜினால்டோ பன்ஜிங்கை கடந்த மாதம் கடத்திச் சென்றவர்கள் அவரை கொலை செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு கைத்தொழில் நகரமான சன்பற்றோஸ் சுவாவில் இவரது சடலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

72 வயதான ரெஜினால்டோபன்ஜிங்கின்கைகள்கட்டப்பட்ட நிலையில்,கழுத்தைச் சுற்றிக் கயிறு ஒன்றும் காணப் பட்டது.

இவர், 1986 முதல் 1990 வரையிலும் அதன் பின் 1998 முதல் 2000 ஆம் ஆண்டு வரையில் 2 தடவைகள் பொருளாதார அமைச்சராக இருந்துள்ளார். (உ-9)

## பாகிஸ்தானிலிருந்து வெளிநாட்டவர்கள் வெளியேறுகின்றனர்

(புதுடில்லி)

பாகிஸ்தானினுள்ள ஐ.நா. சபையின் பணியாளர்களின் குடும்பங்கள் கடந்த ஞாயிறு முதல் நாட்டைவிட்டு வெளியேறத் தொடங்கியுள்ளன.

அடுத்த சில நாட்களில் ஐ. நா. பணியாளர்களின் 300 குடும்பங்கள்அந்நாட்டைவிட்டு வெளியேறக்காத்திருப்பதாக ஐ. நா.வின் செய்தி மையத்தின் தலைவர் எரிக் பாஸ் தெரிவித்துள்ளார். (உ-4)

## பயங்கரவாதம், மதவாதம் இரண்டையும் வளர விடக்கூடாது

### அல்மாட்டியில் அடல்பிஹாரி வாஜ்பாய்

பயங்கரவாதத்தையும்மதத் தீவிரவாதத்தையும் ஆசிய நாடுகளில் வளர விடக்கூடாதென்று இந்தியப் பிரதமர் அடல்பிஹாரிவாஜ்பாய்உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

கஜகஸ்தான் அல்மாட்டியில் ஆசிய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில்கலந்து கொள்வதற்காக சென்றுள்ள வாஜ்பாய் செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்:

வாஜ்பாய் மேலும் உரையாற்றுகையில், பயங்கரவாத்தை முற்றிலுமாக ஒழிக்க இந்தியாவும் கஜகஸ்தானும் கூட்டுச்செயற்குழு வொன்றை அமைத்துள்ளன என்றார்.

கஜகஸ்தான் அதிபர் நகேப் சேருடன் விரிவான பேச்சுக்கள் நடாத்திய பின்னர் செய்தியாளர்களிடம் இப்பேட்டியை அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எல்லைதாண்டிய பயங்கரவாதத்தால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றி கஜகஸ்தான் அதிபர் புரிந்து கொண்டிருப்பதாகவும் வாஜ்பாய் குறிப்பிட்டார்.

இருநாடுகளிடையேயும் பாதுகாப்பு, சுற்றுலா உள்ளிட்ட மூன்று துறைகளில் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

சர்வதேசப் பாதுகாப்பு குறித்தும் நாடுகளிடையேயுள்ள பூசலைத் தீர்க்கவும் ஆசிய நாடுகளிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கையாக இந்த மாநாடு அமைந்தது குறிப்பிடத்தக்கது. இந்த மாநாட்டில் பயங்கரவாதத்திற்கு எதிரான பிரகடனம்ஒன்றும் வெளியிடப் படவுள்ளது. (உ-4)

## மரக்கன்றுகள் நாட்டி கின்னசுக்கு முயற்சி

(புதுடில்லி)

சுற்றுச்சூழலைப்பாதுகாப்பதிலும் பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்வதிலும் மாநிலத்திலேயே முதலிடத்தில் இருக்கும் நீலகிரி மாவட்டம், ஒரே நாளில் 40 ஆயிரம் மரக்கன்றுகளை நட்டு உலகச் சாதனை புத்தகமாகிய கின்னஸில் இடம்பெற தயாராகி வருகின்றது.

இன்று உலகமெங்கிலும் உலகச்சுற்றுச் சூழல்தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. (உ-4)

## பிரதேச

மாத ஆரம்பத்தில் இருந்து நடைமுறைக்கு வரவிருப்பதாக கல்விப் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-19)

எய்தந் சரியதுஇயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரியசெயல்

குறள்

# வலம்புரி

## வாசிப்புக் கணிப்பீடு

அரசும்- விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து நிரந்தர யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வரும் இக்காலப்பகுதியில் சிங்கள, முஸ்லிம் மக்களின் யாழ். வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம் வந்து போனால் அவர்களுக்கு அவர்களது இடத்தில் 'புனித தந்தத்தை' நேரில் தரிசித்தவர் போல் அவ்வளவு மதிப்பு. அதேபோல் முஸ்லிம் இனத்தவர் யாழ்ப்பாணம் வந்து சென்றால் அவர்களுக்குமக்காவுக்குச் சென்றுவந்த மதிப்பு.

இதில் விசேடமென்னவெனில் நாட்டின் முக்கிய அமைச்சர்கள் அரச, அரச சார்பற்ற அமைப்புகள், சர்வதேசப்பொதுஅமைப்புகள், உலக வங்கிப் பிரதிநிதிகள் எனப் பலரும் யாழ்ப்பாணம் வருகின்றனர். யாழ். செயலகத்தில் மாநாடு கூட்டுகின்றனர். யாழ்ப்பாண அதிகாரிகள் கும்பாபிஷேகத்தில் ஓம குண்டம் வளர்த்து மந்திரம் சொல்லுவது போல் பட்டோலை வாசிக்கின்றனர். முக்கியமான விடயங்கள் மந்திரத்தில் வரும் போது அமைச்சர்கள் தங்கள் பாட்டில் கதைத்துக் கொண்டிருப்பார்கள். அல்லது புகைப்படத்திற்குப் புகலிடம் கொடுப்பதற்காக அமைச்சரின் காதுக்குள் ஏதோ ஏதோவெல்லாம் கதைப்பார்கள். சில வேளைகளில் 'எப்போது கொழும்பு திரும்புவதாக உமது மனைவியிடம் கூறிவிட்டு வந்தனீர், என்பதாகக் கூட அந்த இரகசியம் இருக்கலாம். எப்படியிருக்கிறது யாழ் செயலக மாநாடு. முன்னே ஒருவர் எழுந்து நின்று பட்டோலை வாசிக்க கேட்க வேண்டியவர் கதைத்துக் கொண்டிருந்தால் நிலைமையைப் புரிந்து கொள்வது எப்படி?

போகட்டும் வாசிப்பவராவது ஐயா; அமைச்சரே தயவு செய்து ஒரு கணம் எனது திணைக்கள விடயத்தை உற்றுக் கேளுங்கள் என்று கூறுவாரா? இல்லை அமைச்சர் பராக்குப் 'பார்ப்பது தானே நல்லது. விரைவாக வாசித்து விட்டு 'இன்று வாசிப்புக் கணிப்பீடு' முடிந்து விட்டதென ஓடிப்போய் கதிரையில் அமரலாம்.

இதைத்தான் எல்லாம் வெறும் 'செப்படி வித்தை' என்று யோகர் சுவாமிகள் முன்னரே கூறிவிட்டார் ஒருபயனும் இல்லை.

# அதிகரித்த பொலித்தீன் உற்பத்தி, பாவனையால் சூழல் மாசுபடும் அபாயம் உருவாகி வருகின்றது

இன்று சூழல் பாதுகாப்பு தினம்

**ஆ. ஜென்சன்றொனால்ட்**

வேகமாக வளர்ந்துவரும் இயந்திரமய உலகினிலே நாளுக்குநாள் அதிகரித்து வரும் பொலித்தீன் உற்பத்தியும், அதன் பாவனையும் சூழல்மாசுபடும் அபாயத்தை ஏற்படுத்தி உயிரினங்களின் இருப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

### கையாளுவது சுலபம்

தற்போது எங்கு பார்த்தாலும் பொலித்தீன் மயமாகவேயுள்ளது. அதாவது பொதி செய்வது, காவிச் செல்லுவது போன்ற கையாளும் நடைமுறைகளுக்கு பொலித்தீன் மிகவும் சுலபமானதாக இருப்பதனால், உற்பத்தியாளர்கள் தமது பெரும்பாலான உற்பத்திப் பொருட்களை இந்தப் பொலித்தீன் பைகளிலேயே அடைத்து விநியோகிக்கின்றார்கள்.

இவ்வாறு கையாளப் படும் பொலித்தீன் அதனுள் அடைக்கப்பட்டுள்ள பொருளின் நுகர்வின் பின்னர் பாவனைக்குதவாததாகி விடுவதால் அவை சூழலிலே வீசப்படுகின்றன.

### உற்பத்தி வேகம்

பல்வேறு உற்பத்தி நடைமுறைகளின் போது அவற்றில் செயற்றிறன் வேகத்தை உற்பத்தியாளர்கள் கைக்கொள்வது வழமை. இதற்கமைய உற்பத்திப் பொருட்களை மேம்படுத்தி நேரமிச்சத்தோடு விரைவாக பொதி செய்து உள்ளீடுகளை நீண்ட காலம் பாதுகாத்து வைத்திருக்கும் பண்பு நீர், வளி உட்புகவிடாமை போன்ற பண்புகளைக் கொண்ட பொலித்தீன பெருமளவு பயன்படுத்தப்படுகின்றது.

மேலும் இவை நேர்கோட்டுப் பயன்பாட்டை அதாவது மீள் சுழற்சியில் ஈடுபடமுடியாத பயன்பாட்டைக் கொண்டிருப்பதனால் இதன் உற்பத்தித் தேவை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது; எனவே, நாளுக்கு நாள் கூடிச் செல்லும் இதன் கேள்விக்கேற்ப உற்பத்தியும் அதிகரித்துச் செல்வதால் சூழலிலே இதன் தேக்கமும் அதிகரிக்கின்றது.

### நுளம்புப் பெருக்கம்

இந்தப் பொலித்தீன் வகைப் பைகள், உறைகள் பாத்திரங்கள், விளையாட்டுப் பொருள்கள், மூடிகள் போன்றவை சூழலிலே தேங்கும் போது அவை கொண்டுள்ள நீர் கசியவிடாத் தன்மை காரணமாக மழை நீரையும் தேக்கி வைத்துக் கொள்கின்றன.

அத்துடன் நீர் வடிந்து செல்லும் வாய்க்கால்களில் இவை சேரும் போது, அவற்றை அடைத்து கழிவு நீரைத்தேங்கச் செய்கின்றன.

இவ்வாறு நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகளின்பெருக்கம் அதிகரித்து மலேரியா போன்ற கொடிய காய்ச்சல் மற்றும் நீர்வழியாக பரவும் நோய்கள் ஏற்பட்டு உயிராபத்துக்கள் நிகழ்வதோடு, துர்நாற்றத்தினால் மக்களுக்கு பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

### அழகு கெடுதல்

பொலித்தீன் பாவனைப் பொருட்களின் கழித் தொதுக்கப்படும் பகுதிகள், அங்கும் மிங்குமாகச் சிதறிக்கிடந்து சூழல் அழகையும் கெடுத்து விடுவதோடு வீதிகளின் போக்கு வரத்துக்கும் இடையூறு விழைவிக்கின்றன.

அதாவது காற்றால் அடித்துச் செல்லப்படும் பொலித்தீன்கள் வாகனங்களின் சக்கரங்களுக்குள் சிக்குண்டு பல்வேறு விபத்துக்களைக் கூட நிகழ்த்துவதற்குக் காலாக அமைகின்றன.

### யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத்திலும் ஏனைய நகரங்களைப் போல பொலித்தீனின்பாவனை மிகவும்அதிகமாகவேயுள்ளது. இங்கு யாழ். நகரின் மையப் பகுதியில் நடைபெறும் வர்த்தக நடவடிக்கைகளின் போது கழிக்கப்படும் பொலித்தீன்கள, பிளாஸ்த்திக்கு பொருட்கள் என்பவை நகரின் அழகை கெடுப்பதோடு, பல்வேறு சூழல் அச்சுறுத்தல்களுக்கும் காரணமாகின்றன.

குறிப்பாக யாழ். நகரை அண்டிய முனியப்பர் ஒழுங்கைப் பகுதியிலும், மாநகர சபையினால் குப்பைகளைக் குவிக்கும் பகுதிகளிலும் சென்று பார்த்தால் புரியும் பொலித்தீனின் தேக்கத்தை,

இங்கு கூட பொலித்தீன் உற்பத்தி ஸ்தாபனமொன்று இயங்கத் தொடங்குவதற்கான முயற்சிகளை அண்மையில் மேற்கொண்டது. ஆயினும் பல்வேறு சாதகமற்ற சூழல்களால் அவை செயற்படவில்லை.

இப்பொலித்தீனின் பாவனையால் எதிர்காலத்தில் ஏற்படும் சூழலியல் அபாயங்களைத் தடுப்பதற்காக எமது அண்டை நாடான இந்தியாவின் தமிழ் நாட்டில் அண்மையில் பொலித்தீன் உற்பத்தி செய்வது, பாவனை செய்வதற்கெதிரான தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டதோடு மீறுவோருக்கு சிறைத்தண்டனையும் வழங்க சட்டம் இடமளித்துள்ளது அதாவது பொலித்தீனால் எதிர் காலத்தில் ஏற்படவிருக்கும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்து அதை சமாளிக்க அவர்கள் முன் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

அதேபோல் நாமும் எமது நகரையும் சூழலையும் பாதுகாக்க இயன்றவரை பொலித்தீன் பாவனையை குறைக்க பாடுபட வேண்டும். இதற்கு யாழ் மாநகரசபையினரும் பல முன் நடவடிக்கைகளை எடுப்பது சிறந்தது.

### தாவரங்களுக்கு பாதிப்பு

சூழற் சமநிலையைப் பேணுவதில் மிகப் பெரும் பங்கை புவிமேற்பரப்பில் பச்சைத் தாவரங்கள் புரிந்து வருகின்றன. இவை அழிவுறா வண்ணம் காக்கப்பட்டாலேயே எதிர்கால உயிரின் நிலவுகையும் சாதகமானதாக அமையும்.

அதாவது ஞாயிற்று சக்தியை புவி மேற்பரப்பில் முதன் முதலில் கைப்பற்றித் தரும் உற்பத்தியாளர்கள் தாவரங்களேயாகும்.

பொலித்தீன் பாவனை அதிகரித்து இவை மண்ணுள்புதையுண்டு போனாலும் உக்குவதில்லை. மேலும்பொலித்தீன் நீர் கசியவிடும் இயல்பையும் கொண்டிருப்பதில்லை இதன் காரணமாக பொலித்தீன் தாவர வேர்களை நிலத்தின் அடிப்பரப்பை நோக்கி ஊடுருவ முடியாத வண்ணம் தடுக்கிறது. இதனால் தாவரங்கள் அழிந்து போகின்றன

மேலும் இவற்றின் நீர் கசிய விடா இயல்பு காரணமாகமழை நீரை புவியினுள் செல்ல தடை விதிக்கப்படுகின்றது. எனவே நிலத்தடி நீரின் அளவு குறைய வறட்சியும், தாவர அழிவும் ஏற்பட காரணமாகின்றது.

### தகனம்

பொலித்தீனானது பண்படுத்தப்படாத எண்ணையிலிருந்து பெறப்படும் பக்க விளைவான எதிலீன் எனும் சேர்வைகள் பல இணைவதன் மூலம் பொலி எதிலீன் எனும் பல்பகுதியமாக கிடைக்கின்றதுஇது $(CH_4)n$ எனும் இரசாயன வடிவுடையது.

இதனை விடவும் பெற்றோலியப் பொருட்களின் பக்க விளைவாக கிடைக்கும் பொலிப்புறப்பலீன் எனப்படும் $(C_3H_6)n$, பொலி வீனைல் குளோறைட் (PVC) எனப்படும் $(CH_3CL)n$, மற்றும் றெஜிபோம் எனப்படும் பொலிஸ்ரைரீன் $(C_8H_8)n$ ஆகியனவும் தகனமுறும் போது அதிகளவு காபனீரொக்சைட் $(CO_2)$, மற்றும்கரி (C), குளோரின் வகை$(CL_2)$ வாயுக்கள் மற்று கந்தகம்(S) அடங்கிய சேர்வைகளிலிருந்து வரும் கந்தக வீரொட்சைட் $(SO_2)$ வாயுக்கள், மற்றும் நச்சு வாயுக்கள் என்பனவும் வளிமண்டலத்துக்கு அதிகளவில் வெளிவிடப்படுகின்றன. இவை வளிச்சூழலை பெரிதும் மாசுபடுத்துகின்றன.

### சூழல் மாசடைதல்

உயிரின மண்டலத்தில் வாழும் அங்கிகளின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்புஉண்டு பண்ணக் கூடியதாயினும் ஒரு பதார்த்தம் அச் சூழலில் சேருதல் சூழல் மாசுபடல் என அழைக்கப்படும்.


இங்கு பொலித்தீன், மற்றும் பிளாத்திக்கு பொருட்களின் பிரிகையடையாத தன்மை அதாவது உக்காத தன்மை காரணமாக தாவரங்களுக்கும் மண்வாழ் அங்கிகளுக்கும் பாதிப்புகள் ஏற்படுவதோடு, இவற்றின் தகனத்தினால் மனிதன் முதல் ஏனைய உயிரினங்கள் வரை சுவாசப் பாதிப்புகளுக்கும் வேறு அசௌகரியங்களுக்கும் ஆளாகின்றன.

மேலும் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்வாயு அதிகரிப்பினால் பச்சை இல்ல விளைவு (Green house effect) ஏற்பட்டு சூழல் வெப்பநிலை உயர்வு, கடல் மட்ட உயர்வு, என்பனவற்றால் பல பாதிப்புகளை உயிரினங்கள் எதிர்நோக்குகின்றன.

எனவே இந்த பாரிய அபாயத்தை ஏற்படுத்தமூல காரணமாக விளங்கும் பொலித்தீன் பாவனையை நாம் குறைத்து எளிதில் உக்கக் கூடியகடதாசி போன்ற பொருட்களை பாவனைக்குட்படுத்தி எமது வாழ்வையும் எதிர்கால சந்ததியின் வாழ்வையும் ஆரோக்கிய மூடையதாக மாற்ற இன்றே செயல்பட தொடங்குவோமாக!

---

## தினசரி தியானம்



### தபோதனன்

எவ்வுயிரும் தன்னுயிர்போல்
எண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச்
சிந்தைவைப்ப தெந்நாளோ?

- தாயுமானவர்

நான் தேடுவனவற்றுள் தெய்வமே, நீ ஒருவனே பழுதற்ற பொருள்.

தெய்வத்துக்கு நாம் எதைக் கொடுக்கின்றோமோ அவன் அதைப் பன்மடங்கு அதிகப்படுத்தி நமக்கே கொடுத்துவிடுகிறான். அவனுக்கு நாம்படைப் பவைகளில் மிகமேலானது அவனைக் குறித்து நாம் பண்ணும் தவம். தவம் பண்ணப் பண்ண நம் தவத்தை அவன் இன்னும் அதிகப்படுத்துகிறான். தவமே வடிவெடுத்திருப்பவன் தெய்வத்துக்கு ஒப்பாகிறான். சிறந்த தவசியைக் காண்பதும் தெய்வத்தைக் காண்பதும் ஒன்றே.

- ஸ்ரீமத்சுவாமிசித்பவ ானந்தர்

---

# வீரப்பனை விரைவில் கைது செய்வது உறுதி

## தேவாரம் திட்டவட்டமாக தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் பெரும் சர்ச்சைக்குரியவராக விளங்கும் சந்தனக் கடத்தல் வீரப்பன், வெகுவிரைவில் கைது செய்யப்படுவார் என்று சிறப்பு பொலிஸ் படையின் இணைத் தலைவர் வால்ற்றர்தேவாரம் கூறியுள்ளார்

இடைவிடாத் தேடுதல் காரணமாக வீரப்பன் கும்பல் 3 பேராக குறைந்துவிட்டது.

வீரப்பனின் முன்னாள் கூட்டாளிகள் இருவர் அண்யில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களிடமிருந்த நாட்டுத்துப்பாக்கிகள் சில கைப்பற்றப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

மில்க்வைற்




25 மொடேன் மில்க்வைற் மேலுறைகளை வாடிக்கை கடைகளில் கொடுத்து ஒரு கொம்பாஸ் பெட்டியை பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ
527, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 3541

# அமுலில் இருக்கும் போர் நிறுத்த ஒப்பந்தம் பல முக்கிய அம்சங்களைக் கொண்டது

## கொழும்பு ஆங்கில பத்திரிகைக்கு சு. ப. தமிழ்ச்செல்வன் பேட்டி

(கொழும்பு)

தற்பொழுது நடைமுறையில் இருக்கும் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பல முக்கியமான அம்சங்களைக் கொண்டிருப்பதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு தமிழ்ச்செல்வன் பேட்டியளித்திருந்தார். அப்பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கடந்த காலங்களில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்தத்திலும் பார்க்க இம்முறை நடைமுறையில் இருக்கும் போர் நிறுத்தம் முக்கிய வேறுபட்ட அம்சங்களைக் கொண்டது.

விடுதலைப் புலிகள் கடந்த காலத்தில் சமாதான நல்லெண்ண சமிக்ஞையாக போர் நிறுத்தத்தை அறிவித்த போது அதனை அப்போது ஆட்சியில் இருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு உதாசீனம் செய்தது. அத்துடன் தமிழர் தாயகப் பிரதேசத்தை ஆக்கிரமிக்க ஒரு சந்தர்ப்பமாக அதனைப் பயன்படுத்தியது.

ஆனால் தற்போது விடுதலைப் புலிகளும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசும் நடைமுறையில் உள்ள போர் நிறுத்தம் தொடர்பான அனைத்து விடயங்களையும் ஆலோசித்த பின்னரே நோர்வேயின் அனுசரணையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க அரசின் மீது எமக்கு அதிருப்தியிருந்தாலும் முற்று முழுதாகவும் அரசாங்கத்தின் மீது நாம் நம்பிக்கை இழந்து விடவில்லை

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற தேர்தலில் மட்டுமல்ல அற்குப் பின்னர் நடைபெற்ற அனைத்துத் தேர்தலிலும் சிங்கள மக்கள் சமாதானப் பேச்சுக்கள் மூலமே தீர்வு காணவேண்டும் என்று தமது ஆதரவை ரணில் விக்கிரமசிங்காவுக்கு வழங்கியுள்ளனர்.

இதனால் அவரின் பலம் அதிகரித்துள்ளது இந்நிலையில் பௌத்த சிங்கள பேரினவாதிகளின் எதிர்ப்புக்களை முறியடித்து சமாதான முயற்சியை ரணில் தொடருவார் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாக நம்பிக்கை வெளியிட்ட தமிழ்ச்செல்வன் அப்பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்

தாய்லாந்தில் சமாதானப்பேச்சுக்கள் விரைவாக நடைபெறுவதற்குரிய பொறுப்பு அரசின் கைகளிலேயே தங்கி உள்ளது. புலிகள் மீதான தடை நீக்கம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்த விடயங்களை நிறைவேற்றுவதன் மூலம் பேச்சுவார்த்தைக்கான கால அளவை அரசு துரிதப்படுத்த முடியும் என்றும் கூறினார்.(இ)

**எம்மை விடுதலை...**

போரை மேற்கொண்ட அரசியல் சிந்தனைப் படி நாமும் தாய் நாட்டின் ஆளுமை உரிமைக்காகவும் இறைமையாண்மையைக் காப்பாற்றவும் சண்டையிட்டோம். ஆனால் எம்மை விடுவிக்க எந்தவொரு அரசும் முயற்சி எடுக்கவில்லை என்று போயாகொட வருத்தம் தெரிவித்துள்ளார்.

சில அரசியல்வாதிகள்தான் விடுதலைப் புலிகளுக்கு எரிபொருள் வழங்கினேன் எனவும், விடுதலைப் புலிகளுக்குப் பயிற்சி வழங்கினேன் எனவும் கூறுகின்றார்கள். இது உண்மையானால் நான்தான் போர்க்கைதியாக விடுதலைப் புலிகளிடம் இருக்கின்றேன் என்றும் கேட்டார்.

ஒரு தடவை நாம் உண்ணாவிரதம் இருந்தோம் எனது மனைவி அரசியல் வாதிகளிடம் எம்மை விடுவிக்க ஒத்துழைக்கக் கோரியிருந்தார். அதற்கு அவர்கள் இது பற்றிப் பேச இது நேரம் அல்ல எனத் தட்டிக் கழித்துவிட்டனர் என்றும் கப்டன் அஜித்குமார போயாகொட கூறினார். (வ)

**அரசு புலிகள்...**

காண நாம் ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளோம்.

ஸ்ரீலங்காவின் மகாநாயக்கர்கள் ஆகிய நாம் அந் நாட்டின் பாதுகாவலர்கள். இந்த வகையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை வரவேற்கின்றோம் அத்துடன் போர் காரணமாக நாடு பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றது என்றும் தெரிவித்த அனுநாயக்கர்கள் இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கள் வெற்றி பெற யப்பானியரும், யப்பானில் வாழும் இலங்கை மக்களும் முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

யப்பானில் தங்கியிருக்கும் சமாதானத்துக்கும் அபிவிருத்திக்குமான மகாநாயக்கர் தேரர் அமைப்பைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்களான ரம்புக்வெல்லவிபஸ்சிதேரர், உடுகமசத்தமகீர்த்திதேரர், மடிஹே பஞ்ஞாசிகதேரர், வேவல் தெனிய மெதாலங்காரதேரர் ஆகியோர். ஒரு வாரகால விஜயம் மேற்கொண்டு யப்பானிய பௌத்த அமைப்பான ஷகோஷிக்காய் என்னும் அமைப்பினது அழைப்பின் பெயரில் அங்கு சென்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

**பலாலியைப் போன்று...**

பாட்டின் படி வடக்குக் கிழக்கு பாடசாலைகள் மற்றும் வணக்கஸ்தலங்களில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும். ஆனால் இராணுவம் இதுவரை வெளியோறாமைக்கு போதிய காலஅவகாசம் இன்மையும் பணப்பற்றாக்குறையும் ஒரு காரணமாகும்.

கடந்த காலங்களில் சமாதான முயற்சிகள் தோல்வி அடைந்ததால் தற்போதைய முயற்சிகள் குறித்தும் சந்தேகம் தோன்றுகின்றது. ஆனால் இந்தச் சந்தேகங்கள் ஒதுக்கித்தள்ளப்பட வேண்டியவை.

சமாதான முயற்சிகள் வெற்றியடைந்தால் அது இராணுவத்தினருக்கே பெரியளவில் அனுகூலமாக அமையும்.

புரிந்துணர்வு ஒப்பந்தப்படி பொதுக் கட்டிடங்களில் இருந்து இராணுவம் வெளியேறாமல் இருந்திருக்கலாம். ஆனால் இதுவரை புலிகளும் இராணுவத்தினரும் யுத்தநிறுத்தத்தை கடைப்பிடித்து வருகின்றனர். இதே வேளை சாவகச்சேரிப்பகுதியில் இராணுவத்தினர் பாரிய இராணுவ முகாம் ஒன்றை அமைத்து வருவதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இது முற்றிலும் தவறானதாகும் என்றும் அவர் தெரிவித்தார். (த)

**மின்சாரம் தாக்கி...**

தெரிந்ததே.

கடந்த மாதம் 24ந் திகதி அன்ரனா பொருத்தும் முயற்சியில் ஈடுபட்ட போது அன்ரனா மின்கம்பியில் முட்டியதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மூன்று பிள்ளைகளும் காயமடைந்தனர்.

படுகாயமடைந்த நான்கு பேரும் தொடர்ந்து ஒருவர் பின்ஒருவராக உயிரிழந்தமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.(த)

**பலாலிப் பாதுகாப்பு...**

நாட்டின் இறைமைக்கும், தேசியப் பாதுகாப்புக்கும் பின்டைவு ஏற்படாதவாறு நாம் மிகவும் அவதானமாக இருந்து செயற்படுகிறோம் ஆனால் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியமாட்டோம் என்று கூறினார். (வ)

**அரசு பேசுவதற்கு...**

நீக்கப்பட்டு சுதந்திரமாக மீன்பிடிப்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

* மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இருந்து இராணுவச் சோதனைச்சாவடிகள், படைமுகாம்கள் அகற்றப்பட வேண்டும்.

* விடுதலைப் புலிகள் மீதான தடையை நிபந்தனைகள் இன்றி நீக்கவேண்டும்.

* இடைக்கால நிரவாக சபையை அமைப்பது தொடர்பாக பேச்சுவார்த்தையின் போது ஆராய வேண்டும் என்றும் அப்பேட்டியில் வலியுறுத்திக் கூறிய அன்ரன் பாலசிங்கம் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் இல்லையே பேச்சுவார்த்தை தாமதமடையலாம் என்றும் தெரிவித்தார்.

தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை அடங்கிய தீர்வை அரசு முன்வைக்காவிட்டால் போராடுவதற்கு விடுதலைப் புலிகள் தயங்கமாட்டார்கள்.

திம்புப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பட்ட நிலைமை இப்பேச்சுவார்த்தைக்கு ஏற்படக்கூடாது.

ஜனாதிபதி சந்திரிகா புரிந்துணர்வு. உடன்படிக்கைக்கு எதிராகவும் அதனைக் குழப்பவும் நடவடிக்கை எடுத்துவருகிறார். ஆரம்பத்தில் புலிகளின் தடைநீக்கம், இடைக்கால நிர்வாகம் பற்றிப் பிரதமர் தாம் அளித்த வாக்குறுதிகளை ஜனாதிபதியின் அழுத்தத்தினால் காப்பாற்ற முடியாமல் உள்ளார். இது அவர்களது அரசியல் சம்பந்தமானது என்றும் அன்ரன் பாசிங்கம் தெரிவிததுள்ளார். (வ)

லாலாவின்
தயாரிப்பு
சண்சயின்
சோப்
மாணவர்களே! போட்டியில் பங்கு கொள்ளுங்கள்.
லாலா அச்சுவேலி

## யாழ். மாநகரசபை

# ஸ்தல ஊழியர் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை ஐக்கியஸ்தலதாபன ஊழியர்களால் கடந்த 4நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த பணி நிறுத்தப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

இதனையடுத்து நேற்று நண்பகலுக்கு பின்னர் அத்தியாவசியமான இடங்களில் இவர்கள் தமது பணிகளை மேற்கொண்டனர்.

நேற்றைய தினம் யாழ் மாநாகர முதல்வர் எஸ்.கந்தையன் தலைமையில் ஐக்கிய ஸ்தலதாபன ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் மேஜர் வழங்கிய சில உறுதி மொழிகளின் பிரகாரம இப் போராட்டம் கைவிடப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் யாழ் மாநகர ஆணையாளர் இ. இராமலிங்கம், பிராந்திய ஆணையாளர் எஸ்.குணராசா, மற்றும் மாநகரசபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (உ)

# “நெஞ்சுறுத்தும் கானல்” நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் இன்று பிற்பகல் 2மணிக்கு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் மிதிவெடி விழிப்புணர்ச்சி செயற்திட்டம் தொடர்பான நெஞசுறுத்தும் கானல் நாடக ஆற்றுகைய்ய நடத்தவுள்ளனர்.

இதேவேளை நேற்று சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் மேற்படி நாடக ஆற்றுகை நடைபெற்றது. (இ)

# சுயதொழில் முயற்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கான சுயதொழில் செயற்திட்டப் பயிற்சிகள் இன்று முற்பகல் 10மணிக்கு இளவாலை சென்.யூட்ஸ் தேவாலய முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.

இச் சுயதொழில் முயற்சித்திட்டத்தில் சகாயபுரம், விளான், மாதகல், இளவாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த பெண்கள் பங்குபற்றலாமென்று சுயதொழில் முயற்சி செயற்திட்ட மகளிர் அமைப்பு தெரிவித்துள்ளது. (இ.6)

# அதிபர்களுக்கு இன்றுகூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பி.ப.2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலை ஆசிரியர் ஒருவருடன் சமுகமளிக்குமாறு கோட்டக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (த)

**செயலமர்வு..**

என்.வரதராஜா கேட்டுள்ளார்.

இச் செயலமர்வு எதிர்வரும் 8ம் திகதி சனிக்கிழமை நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.(த)

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
இலங்கை
உடற்கல்வி டிப்ளோமா பரீட்சை

உடற்கல்வி டிப்ளோமா முதலாம், இரண்டாம் வருட பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் 15.06.2002ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு ரூபா 50/=வீதம் பல்கலைக் கழக காசாளரிடமோ அல்லது பல்கலைக் கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப் படிவங்கள் இன்று 05.06. 2002ல் இருந்து உடற்கல்வி அலகில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப் பட்ட விண்ணப்பங்களை “இணைப்பாளர், உடற் கல்வி அலகு” அவர்களிடம் சமர்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர் (C/4331)

# உலக கால்ப் பந்துப் போட்டி சீன அணி மண்கவ்வியது

(சியோல்)

உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் முதன் முறையாக பங்கு பற்றிய சீன நாட்டு அணி 2:0 என்ற நிலையில் கொஸ்ராரிக்கா அணியிடம் தோற்றுப்போனது.

பல இலட்சக்கணக்கான சீன மக்களின் எதிர்பார்ப்புக்களின் மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில் சீன அணி தோல்வியடைந்தமை அந் நாட்டு மக்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் விளையாடிய யப்பான், பெல்ஜியம் நாட்டு அணிகள் 2:2 என்ற கோல்க் கணக்கில் வெற்றி தோல்வி இன்றி ஆட்டத்தை முடித்துக் கொண்டன.

நேற்றைய இறுதிப்போட்டியில் விளையாடிய கொரிய அணி 2:0 என்ற கோல்க் கணக்கில் போலந்து அணியை தோற்கடித்தது.

நேற்று நடைபெற்ற மூன்று போட்டிகளிலும் ஆசிய நாட்டு அணிகள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.(ந-5)

துயர் பகிர்வு

எமது சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு.நா.தவராஜசேகரன் அவர்களின் அன்புத் தந்தையார்

திரு. நாராணி நாகேந்திரம்
அவர்களது

பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊர்காவற்றுறை பிரதேசசபை
ஊழியர் நலன்புரிச்சங்கம்.

(C/4330)

விசேட அறிவித்தல்

பனை அபிவிருத்திச் சபை
திக்கம் வடிசாலை

மதுபானம் விலை ஏற்றம்

கடந்த மார்ச் – 2002ல் நடைபெற்ற அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் 03/06/2002 தொடக்கம் எமது வடிசாலையில் தயாரிக்கப்படும் பனஞ் சாராயத்தின் சில்லறை விலை 750ml ரூபா 258/= ஆக இருக்கும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தலைமைச் செயலகம்
53 கண்டிவீதி
யாழ்ப்பாணம்

(C/4332)

பொ. சிவபாதம்
தலைவர்
பனை அபிவிருத்திச் சபை

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.